திருமாலிருஞ்சோலைமலை-

அழகர்பிள்ளைத்தமிழ்.

மூலபாடம்.

வேப்பத்தூர்ச்

சங்கப்புலவர்கள்

பாடிஅருளியது.

இஃது

ஏட்டெழுத்துப்பிரதிகளில் - பாடந்தோறும் பிழைபடுகின்றதைநோக்கி
அதைவிலக்கும்பொருட்டு-சென்னைமாநகரத்துப்பிரபுக்களிலும்
புலவர்களிலும்-உபாத்தியாயர்களிலும்பலரும்-முக்கியமாய்
பேமேஷ்டர்ஆபிஸ்மானேஜர் - ள - ள - இராயவேலூர்

நாதமுனிமுதலியாரும்

செவுர்ன்மெண்டில்மில்ட்டேரிடிப்பார்ட்மெண்ட்மானேஜர்
ள - ள - புதுவை

இராசரத்தினமுதலியாரும்

வேலூர்தமிழ்உபாத்தியாயரும்சங்கீதசாகித்தியப்புலவரும்ஆகிய - ள - ள
பொன்விளைந்தகளத்தூர்

இராமசாமிநாயகரும்

கேட்டுக்கொண்டதால் - சென்னைக்கல்விச்சங்கத்து

தமிழ்ப்புலவர்

திரு-வேங்கடாசலமுதலியாரால்

பல பிரதிகளைக்கொண்டு ஆராய்ந்து - பிழைகளைத் திருத்தி-
தமது ஸரஸ்வதி அச்சுக்கூடத்தில்
பதிக்கப்பட்டது.

இது இவரது தமையனார் குமாரர்

திரு-வீரராகவசாமிமுதலியாரால்

நிறைவேறினது.

சாலிவாகன சகாப்தம் - ௲௭௫௮ - துர்முகிஸு.

1837

பிழைபாடுதிருத்தம்.

பக்கம்.	பாட்டு,	வரி.	பிழைபாடு.	திருத்தம்.
௧	௧	௪	தழிமே -	தமிழே
௭	௭	௧	தெயின்ருழு -	தெயினருழு
௮	௰	௭	யேகின -	யெகின
௰௧	௬	௨	மரகதமுகடி -	மரகதம்முகடி
௨௰	௮	௩	நரகவழி -	நாகவழி
,,	,,	௪	+ -	திருத்தியாயிற்று
,,	,,	,,	நரகவழி -	நாகவழி
,,	௯	௬	படைப்பை -	படப்பை
௨௩	௰௧	௨	மங்குல் -	மருங்குல்
௨௪	௨	௫	தபன் -	தபன
,,	௪	௯	யிருடோய்ந்த -	யிருட்டோய்ந்த
,,	௪	௭	னிவன்னுடன் -	னிவனுடன்
,,	௫	௮	னிவன்னுடன் -	னிவனுடன்
௨௬	௰௧	௫	கிவனன்கந் -	கிவன்னகந்
,,	௨	௭	மிதிற்றுச் -	மிதித்துச்
௨௭	௭	௫	யோழுக்கும் -	யொழுக்கும்
௨௮	௰௧	௮	யேலேல் -	யேலே
௨௯	௧	௮	ழ - -	*
௩௰	௬	௬	போது -	பொது
௩௨	௨	௬	புன்றுடு -	புனறுடு
,,	௪	௪	தரங்க்ப் -	தரங்கப்
,,	௫	௮	குழைய் -	குழைய

+ இந்தக்குறியிட்டிருக்கிற இடந்தோறும் இன்னுஞ்சிலபிரதிகளைக்கொண்டுநன்று ஆராயப்படவேண்டும்-அதனால்சுத்தபாடம்உள்ளவர்கள் அதை எங்களுக்கு அறிவித்தால் அதுபரோபகாரமாகக்கொள்ளப்படும்.

நன்றாக — குருவாழ்க — குருவே துணை.

திருமாலிருஞ்சோலைமலை-

அழகர்பிள்ளைத்தமிழ்.

பாயிரம்.

துதிகவி.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

வெள்ளைத்தமிழ்கொடுலகினிற்பல்புலவர்விருப்பால்விளம்பேனைப் *
பிள்ளைத்தமிழ்ப்பிள்ளைத்தமிழேபெருமாளலங்காரன்பொருட்டால் *
வள்ளைத்தமிழ்க்கூர்வேப்பத்தூர்வருமாண்புலவோர்வகுத்ததனைப் *
பிள்ளைத்தமிழேயெனுஞ்சிறுமைபெருமைபெரியோர்தமிழெனுமால் *

காப்பு.

நேரிசைவெண்பா.

செய்யாடிருமார்பன்செங்கமலக்கண்ணினன் *
மையாரழகன்மலர்த்தாளில் - - - மெய்யாகச்
செப்பும்பிள்ளைத்தமிழ்க்குச்சிந்துரமுன்வந்தளித்த *
துப்பனையபாதந்துணை. *

அவையடக்கம்.

பன்னிருசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தங்கள்.

நீரருமானதப்பெருவாவிபூத்ததொளைநெடுநாளமுளரியேறி *
நீறுபடுபொற்சுண்ணமாடிமதுவுண்டுமகிழ்நிலவுதெறுதூவியன்னம் *
ஆரருயுகளவும்புனலறுகருஞ்சேற்றினடைவாடுபுல்லிதழ்ப்பூ *
ஆம்பலின்மணந்ததுகடுக்குமறையொருநான்கரற்றுநெடுமாலாயிரம் *
பேரருதோதுநாவீறுபெறுகுருகைமுனிபிரமன்பராசரன்முதற் *
பெற்றமுனிமுதலாம்வரத்தினர்முகத்தினிற்பெருவிழவுகொண்டிருக்கும்
வாரருவண்ணாந்தெழுந்ததுணைமுலைவாணிமதிதவழவருதுபாயும் *
மாலிருஞ்சோலைமலைமாலலங்காரனைவழுத்துமென்னாவாழ்ந்ததே (௧)

ஆகத்திளந்தென்றறைவரச்செந்தழலரும்பிலைச்சூதத்தின்வாழ்
அஞ்சிறையயாழிசைமிடற்றகுயிலோசையென்னமிர்தமிசையுண்டசெவிகள்
காகத்தின்வெம்புலாற்பகுவாய்திறந்தலறுகடியகுரலாயதீய
கடுவூண்மிசைந்ததுநிகர்க்குமருண்மாலையிற்கதிரொளிபரப்புமங்கண்
மாகத்துமீன்கணநறுந்துணரொளிப்பவிசைவண்டுழுபடப்பைமுதலின்
வாவியலைகளாதாவிமீனெளிக்கும்புதுவைவல்லிதமிழ்கேட்டுநாக
போகத்துவெண்டிரைப்பாற்கடலின்விழிதுஞ்சுபூந்துழாய்க்கொண்டல்சோலைப்
பொருப்புறையுமாயவன்மாலலங்காரனென்புன்கவிச்சொற்கொண்டதே. (௨)

வழியும்பசுந்தேன்பெருக்காறெடுத்தோடமலர்விண்டமுள்ளரைத்தாள்
மரகதத்தண்பாசடைக்கமலவீட்டுறையுமறையவன்சென்னிமுதல்பார்
இழியுங்குலத்தினவர்கழிமுடைத்தலைகடையிரந்துமண்கொள்ளமுறைநான்
கிருக்குந்துணைத்தாள்பதித்ததுநிகர்க்குமடலிளையநிலவேறுகண்டற்
கழியும்புனற்சுழியும்வளையுமுஞ்சோலைமலைகாவலன்றுளவநெடுமால்
கண்ணகன்கோநகர்ப்புதுவைகுடிவாழிளங்கன்னியுந்தாய்முலைக்கண்
பொழியும்பசும்பாலுருமழலைமாறன்முதல்புலவர்பதின்மரும்வழுத்திப்
புனையுந்தமிழ்ப்பாடல்கொண்டதோரடியென்மொழிபுன்கவித்தொடைகொண்
[டதே (௩)

விரவுந்திரைப்புனற்கங்கையங்கடவுணதிவெள்ளம்பரந்திருப்ப
வினைபுரிகுறுந்தொழுவர்தருமிழிகலத்துநீர்விதுரனின்றுள்சொரிந்தெட்
டரவுங்குலக்கிரியுமலையும்வளைகடல்வேலியவனிதிருவயிறிருப்ப
அவன்மனைப்புன்சுவைச்சிற்றடிசிலன்றுணக்கவனளித்ததுநிகர்க்கும்
குரவும்பசுந்துளவுமணநாறுகொந்தளக்கொடியிடைப்புதுவைவாழும்
கோதையுஞ்சங்கணிதுறைக்குருகைமாநகர்க்குழவிமுதலவர்பதின்மரும்
பரவும்பழம்பாடன்மறைமொழிச்செந்தமிழ்ப்பாமாலைகொண்டதோளில்
பழவடியென்வழுவுடைச்சொன்மாலைசூட்டியதுபைந்துழாய்மலையழகனே (௪)

அவையடக்கம் முற்றும்.

பழிச்சினர்ப்பரவல்.

ஏதங்களைந்தடியருயிரொடுமணப்புற்றவிருவினைதணப்பவோரேழ்
இசைமுறைபழுத்தவந்தாதிகொடுநெடியமாலிருசரணமேத்துபொய்கை
பூதன்றவங்கொள்பேயாழ்வாரிமூவரைப்போதிரண்டினும்வழுத்திப்
பூந்தாமரைத்தாள்வணங்குவென்றெய்வப்புரந்தரனுலோகபாரி
சாதங்கொணர்ந்தெழிற்பின்னைக்குவிளையாடுதளையவிழ்படப்பையாக்கத்
தாழ்சிறைப்புட்கழுத்தேறிமணிவாய்வைத்தசங்குவெண்மிடறுகக்கும்
நாதங்கெழீஇத்தமரர்கூட்டங்கள்சிதறவவர்நாட்டங்கள்கூட்டுவித்த
நாரணனைமாலலங்காரனைவழுத்துமென்னுத்தருஞ்சொற்றழையவே (௧)

மறுத்தலைதுடைத்தமதிமலர்முகத்தேனுடன்வண்டுரேவமதுமாலையும் *
மாயவன்றிருமார்புபொற்பக்கொடுத்துவளமதுளாயிற்றூங்குகிழிதான் *
அறுத்தலைச்செய்திபவெருத்தத்திலாட்புரிந்தாரணத்தமிழ்ப்படுத்தி *
ஆழிமாலிருபதமும்வாழியாடும்புதுவையந்தணன்றுடுதிப்பென் *
சுறுத்தலைநெடும்புணரியேழ்விசும்பேறியிருகளையழிந்தொழுகின்ற *
கன்மாரிகாப்பப்பசுந்தாமரைச்சிறியகைக்கொண்டவரையேழுநாள் *
பொறுத்தலைச்செய்திடையர்சுற்றமுங்கன்றும்புனிற்றுவுநின்றளித்த *
பொங்கர்த்தடஞ்சோலைமலையலங்காரனைப்புகழுமென்கவிதழையவே (உ)

மறைவாக்குரைத்தபொருளுள்ளவையடங்கவும்வைத்துநாமணிமுறத்தில் *
வழுவறத்தெள்ளியவைகோதறவரித்திரதம்வாய்ப்பவளநாறுதமிழின் *
துறைவாக்கெனுங்கலன்பெய்தன்புநீரிற்றுழாய்மணப்பதநோக்கிமால் *
தொண்டர்களருந்தவியலமுதினைவடித்தமுனிதுவணையடிதுதிப்பென்மதுவோர் *
முறைவாக்கிவைத்தபைங்கழைநிறைந்திலவென்றமுதகுடுமியிடறியொழுகும் *
முழுமதியினமுதமுங்குறவர்மடமகளிரொருமுறைவாக்கிவழியவார்த்து *
நிறைவாக்கிவிளையாடுமலையலங்காரர்பதநிற்றலும்வழுத்தியேத்த *
நிறைவாக்குநாளும்பெருக்காறெடுத்தோடிநிலைபெற்றுவாழ்வதற்கே (௩)

கெடப்பாயொளிச்செக்கர்மணியாரநறவுபாய்கிளைதுழாய்க்கொண்டலடியார் *
கேண்மைகொள்பவரருகுமணுகாதவுரைசெவிகேற்பதன்றென்றுபகுவாய்க் *
குடப்பாய்விடப்பெரும்பாந்தள்வாய்கையிட்டகோவேந்தனரசரேறு *
கோப்பெருஞ்சேரமானடியிணைவழுத்துவென்குழமிவானுலவுதெய்வ *
மடப்பாவைமார்பொய்தல்வண்டலாட்டயரவுகைமணியூசலாடமேலை *
மங்குல்வாய்நெஞ்சம்பிளக்கவுயர்சிமையத்துமதிவந்துபோனவழியே *
நடப்பாகவந்துசதிரிளமாதர்தம்மோடுநாளும்விளையாடுமலைவாழ் *
நாரணனைமாலலங்காரனைவழுத்துமென்னன்கவிதைவாழவென்றே (௪)

பொருமடனெடுஞ்சுடர்ப்போராழிமால்கரப்பொன்னாழிகொளவந்தமால் *
புட்பிடர்வரக்கண்டுமெய்ஞ்ஞானவெள்ளம்புறம்பொங்கவுட்களித்துத் *
திருமடனெடுந்தாண்டகங்குறுந்தாண்டகச்செய்யுண்முதல்பலவுரைக்கும் *
திருமங்கைமுனிகலியனற்கவிக்கொண்டல்பூஞ்சேவடிதுதிப்பென்முந்நீர் *
இருமடங்கூறுங்கடாங்கவுட்டுங்கவிழியிருகடையும்வடவைதூங்க *
இருசெவித்தலைகடைக்காறுங்கமாமன்விடுமிகல்கரிமருப்புவாங்கி *
வருமடங்கற்குருளைமாலிருஞ்சோலைமலைமாலலங்காரர்பச்சை *
வண்டுழாய்மண்ணாறுமிருதோளுமிருதாளும்வாழ்த்துமென்கவிதழையவே (௫)

சூட்டுநாகப்பணப்பள்ளிப்பெரும்பாய்சுருட்டித்தமிழ்க்கச்சியிற் *
றுளவக்கருங்கடனடப்பக்குடந்தையிற்றுயிலுமுகிறலையணைப்பப் *
பாட்டுநாவுரைசெயுந்திருமழிசைவேந்தன்பரந்துலாஞ்சிந்தைபொறியின் *
பாலணுகுறுவகைநிறுத்துமுனிதாமரைப்பாதந்துதிப்பென்மலர்பூ *

வீட்டுநான்முகமுனியுநாட்டமாயிரமுடையவேந்தனும்விபுதர்குழுவும் *
வெட்சியந்தெரியல்புனைவேளும்வாரணமுகனும்வெள்ளிவெண்கோடுகூடாக் *
கோட்டுநாகிளமதிக்கண்ணியங்கடவுளுங்கூண்டுவலம்வந்திறைஞ்சும் *
குலமலைத்தலையுறையுமாலலங்காரனைக்கூறுமென்கவிதழையவே (௬)

இருமாலையாகப்பரந்தபூங்காவிரியிரண்டிடைச்சூட்டுநெற்றி
எரிமணிப்பாம்பணைத்துயில்கொள்ளுமொருமாலையிசைமுறைபழுத்தசெஞ்சொ
திருமாலைசூட்டுபவர்தொண்டர்தமடிப்பொடித்தெய்வமுனியறிவின்வடிவாம் [ற்
செந்தாமரைத்தாளுளத்தாமரைத்தலஞ்சேர்த்துவென்றன்னைமுன்னாள் *
தருமாலையப்புணரிநீத்திளந்தெய்வமான்றருணமணியாரமார்பிற் *
றூர்பட்டதண்டுழாய்க்காட்டுள்விளையாடமகிழ்சங்கேந்துகொண்டல்கன்னற் *
பொருமாலைவிண்டசாறோடமதவேழம்புழைக்கரமெடுத்துநீந்தும் *
பொங்கர்மலியிடபகிரிமாலலங்காரனைப்புகழுமென்கவிதழையவே (௭)

விழித்தாமரைத்துணையின்வேறுநோக்கலமென்றுவிரிதிரைப்பொன்னிநாப்பண் *
விழிதுயில்கருங்கொண்டலைப்பரவியாநந்தவெள்ளத்துமூழ்கியியலின் *
மொழித்தாமமொருபத்துமிருதோளணிந்தந்தமுகிலின்வடிவுட்கரந்த *
முனிவன்றனைப்பதம்வழுத்துவென்கொல்லையம்முல்லைப்புலத்துலாவித் *
தெழித்தாமழக்கன்றுதேடிமுலையமுதந்தெருத்தலைநனைப்பவோடிச் *
செல்லமருண்மாலையிற்பின்செலுங்கண்ணனைத்திசைமுகனிருக்குமுந்திச் *
சுழித்தாமரைக்கடவுண்மாலலங்காரனைச்சோலைமலைவீற்றிருக்கும் *
சுந்தரத்தோளனைத்தொண்டனேனுரைசெயுஞ்சொற்பாடல்வளர்வதற்கே (௮)

பாடற்சுரும்புழுதுழாய்வாடவெயினின்றுபவளவாயிரமாறுப் *
பச்சைப்பசுஞ்சொற்புதுப்பாடலுஞ்சுருள்பனிக்குழன்முடித்துதிர்க்கும் *
வாடற்பழஞ்சருகும்வேட்டரங்கேசனும்மலைகுனியநின்றமுகிலும் *
மாலலங்காரனுமிரப்பவருள்புதுவைவருவல்லியிருதாடுதிப்பென் *
சேடற்பெரும்பள்ளிவிழிதுஞ்சுபாற்கடற்சேர்ப்பற்குமணிவரன்றிச் *
சிலம்பாறுபாயுஞ்சிலம்பற்குவெள்ளவொளிதேங்கியலைவைகுந்தவா *
ளுடற்குமுல்லைப்புலத்தானிரைப்பின்னடந்ததாளண்ணலுக்கு *
நான்மறைப்பொருளாயவழகற்குரைக்குமென்னன்கவிதைவாழவென்றே (௯)

மட்டோலிடுந்தொங்கல்வகுளமணநாறுதோண்மாறன்வண்டமிழ்படுத்தி *
வனசவீட்டுறையுமுனிதன்னொடுமெழுதொணுமறைநாலுமெழுதுவிக்கப் *
பட்டோலையெழுதியாங்கவனையீன்றுகவிபாடிநெடுமாறனையும் *
பாடாதமதுரகவியிருதாடுதிக்குவென்பைங்குவளைமென்றுமேதி *
நெட்டோடையுட்புகச்சுரிசங்குதுண்ணெனநிலாமணிக்கருமுதிர்ந்து *
நெடுவரம்புந்தவழ்ந்தேறிவிளைவயல்புகுதநெற்குலையரிந்தமள்ளர் *
கட்டோடுதலைமீதிலாகியுதிர்நெல்லுடன்கதிர்மணியுகுக்கும்யாணர்க் *
காமலையின்மாலலங்காரனைப்பாடுமென்கவிதழைத்தோங்கவென்றே (௰)

மறைமயக்கெவரும்புலப்படவுணர்ந்தறியவாய்மைபெறுபொருளுணர்த்தி *
மாறுபடுசமயங்கள்வாக்கினால்வென்றுதிரைவாரிதிவளாகத்தின்வாய் *
இறைமயக்கந்தவிர்த்தியாவர்க்கும்யாவைக்குமேபிரானுழிசங்கம் *
ஏந்துமாலென்றுறுதியாக்கிராமானுசன்னிருசரணநெஞ்சுள்வைப்பென் *
பிறைமயக்குங்குறுநுதற்கோவிமார்குழிசிபெய்தவளையெற்றுபந்து *
பிறழொளிமணிக்கழங்கிவைகொண்டுநாளும்பெருங்கலகமிட்டுமுடனே *
குறைமயக்குங்கண்பிசைந்தழுதசோதைதன்கோபந்தணிப்பமணிவாய்க் *
கோட்டம்விரித்தழுகின்மாலலங்காரனைக்கூறுமென்கவிதழையவே (௰௧)

திருமாற்பயோர்ததித்திருமந்திரவமுதினைத்திருமகட்குயின்முகந்து *
சேனைமுதலிக்கோட்பெயக்காரிசேய்ச்சுனைத்தேங்கிநாதமுனியாகும் *
அருமாற்கடம்வார்ந்துயக்கொண்டவள்ளன்மடுவார்ந்துசீராமனொன்வா *
யால்வழீஇயாமுனரியவுந்தியுந்திபூன்றுரியக்காவினெழுசிக் *
கருமாற்றிராமானுசக்குளங்கழுமியெழுபானுன்குதும்புகாலக் *
காசினிப்பணையுயிர்க்கூழ்வளரவயன்மதக்காராக்கண்மெய்ந்தடாது *
பெருமாற்குவிளையுள்விடடையப்புறந்தரும்பெருவேலியாமெம்பிரான் *
பேசுபயவேதாந்ததேசிகன்றொடொழுவல்பேரழகனூறழையவே (௰௨)

குணவாயுதித்தெற்றுவேலைஞாலத்திருட்கொள்ளைவெயில்சீத்தகற்றும் *
கோகனகமணவாளனெனவடியர்தொல்லைநாள்கொண்டவினையிருளகற்றும் *
மணவாளமாமுனிவன்மகிழ்வுடன்கருணைபொழிமலர்விழியினெம்மைநோக்கி *
வயிறுபசியாமனுவறளாமனுளுமறைவாய்த்தவிருநாலெழுத்தே *
உணவாகநஞ்செவியிலிருபுறமும்வழியவார்த்துயிர்தளிர்ப்பித்தவெங்கோன் *
ஒளியிட்டுதிருநாட்டுவழிகாட்டுதாட்கமலமுளமீதுவைப்பெனிட்டைப் *
பணவாளராவுலகமுடைநாறுவெண்ணெய்பேய்ப்பாவைதன்முலையுளமுதம் *
பருகிச்செவந்தவாய்மாலலங்காரனைப்பாடுமென்கவிதழையவே (௰௩)

ஒட்டிக்கடிந்துநெடுநாடொட்டுவருதீயவூழ்வினைகடம்வயத்தில் *
ஒடுமைம்புலனையுமனத்தோடுநெறியினின்றொருவழிப்படநிறுத்திக் *
கூட்டித்தடஞ்சோலைமலைநிழன்மலர்க்கரங்கோத்துவலம்வந்துகண்ணீர் *
கொழிப்பமெய்ம்மயிர்பொடித்துளமுருகுதொண்டர்தங்குழுவுடன்கூட்டிவே [தப்
பாட்டிற்றருந்தமிழுமிருநாலெழுத்தும்பசுந்தேன்பெருக்கெடுக்கும்
பைந்துழாய்ப்பள்ளியந்தாமத்தலங்காரர்படிவமென்னெஞ்சகத்துள் *
+ நாட்டித்தளிர்ப்பித்ததிருவாளர்தோழப்பர்நற்றமிழ்ச்சீர்பதிப்போன் *
நலமருவுமழகன்புரோகிதன்புனிதபதநாண்மலர்வழுத்துவேனே (௰௪)

அண்டர்க்குநான்முகக்கடவுட்கும்வானநீராறுபாய்சடிலருக்கும் *
ஐராவதப்பெரும்பாகற்குமெட்டாதவாழிமால்பதமிலையுநற் *
றொண்டர்க்குமன்புபுரிதொண்டர்தந்தொண்டர்கடுணைத்தாடுதிப்பெனலைவாய்ச் *
சுரிசங்கமூசலாடுங்கடற்பள்ளநீர்ச்சூற்கொண்டுதிங்கணிறையும் *

கொண்டற்குலஞ்சொரியுமுத்துங்கழைக்கண்கொழிக்கின்றமுத்தும்வேழக் *
கோடுசொரிமுத்தமும்பூகத்தின்முத்தமுங்குறமகளிர்பொய்தலயரும் *
வண்டற்குரற்புகாவரிசியாகச்சந்தமதுமலர்க்கறியமைக்கும் *
மாலிருஞ்சோலைமலைமாலலங்காரனைவழுத்துமென்னாவாழவே (௰௫)

பாயிரம் முற்றும். ஆக திருவிருத்தம் - ௰௬.

→»●«←

முதலாவது.

காப்புப்பருவம்.

நீர்கொண்டநெடுந்நாணகுறுங்கைதோயநேமிவரைப்பெருவேலிசூழ்மேழு *
பார்கொண்டதாளாளரனைங்குஞ்சோலைப்பருப்பதத்தனலங்காரன்றனையக்காக்க
கார்கொண்டகாரொன்றுகடலிரண்டோர்காலத்துத்தலைமணந்ததெனவசோதை *
ஏர்கொண்டகண்ணினிழல்பாயக்கைம்மீதேந்துமலர்ச்செந்துவர்வாயிளையமாலே.

வேறு. (௧)

வளர்க்கும்பசுங்கிளிக்கமுதமும்பூவைக்குவரிமிடற்றளியலம்பும் *
வளர்தருச்சோலையும்புறவுக்குநிழலுமிழ்மணித்தூதுமானுக்குவான் *
விளக்குங்கலைத்திங்களும்பெடையனத்துக்குவிரிபொகுட்டருகுக்கும் *
விளைநறைக்கமலமுங்கொண்டுவெண்டிரையின்வருமெல்லியலளிக்கமேருத் *
துளக்குங்கடுங்கான்முகந்திறைக்குஞ்சிறைத்துகள்பம்பியுததிசுண்டச் *
சுழன்றிமைகரிக்கக்கடைக்கண்டழற்கற்றைதூண்டச்சினத்தபுள்வாய் *
பிளக்கும்பிரானிசைமுரன்றிதழ்குடைந்தூதுபிள்ளைவண்டாடுதுளபப் *
பிரசமெறிசுந்தரத்தோளாளரன்மறைமுதற்பேராளனிசைதழையவே (௨)

ஆட்டுந்திரைக்குண்டுநீரகழிலங்கைக்குளாறுகால்பாயநறவம் *
ஆறுபாய்தாமரைக்குலமாதையுங்கடவுளாழியங்கதிரோனையும் *
கூட்டுங்கடுங்கார்முகக்கொண்டலைத்தழைக்கொய்துழாய்ச்சாரன்மேருக் *
குவடுபடுசுந்தரத்தோளனைத்திருமங்கைகொண்கனைக்காத்தளிப்பான் *
இட்டும்பிழம்பனற்குளியாதுலைக்கொல்லனில்லம்புகாதரத்தால் *
எறியுணதொலிபொங்கவடியுணதுயர்தட்டிலேறாதுகூர்மழுங்கா *
தூட்டுந்துகிற்றலையினெய்யுணதுறைபுகாதுடல்கறைபடாதிருந்தும் *
உடற்றும்பெரும்படைதொலைக்கும்வாக்காயுதத்தொருகமலமறைமுனிவனே.

வேறு. (௩)

அருமறைமொழியுநூலினைநறியகமலக்கரங்கள்யாப்பவும் *
அளியுளபதுமமாளிகைமுனிவன்வதுவைச்சடங்குகாட்டவும் *
அருள்விளையிமயமாதுலனெழுகுபுனலைத்தடங்கைவார்க்கவும் *
அடைபொதிதுளவநாரணன்வெளியபொரியைக்கொணர்ந்துதூற்றவும் *
இருவருநறுநெய்தூவியவெரியைவலனிற்சுழன்றுபோற்றவும் *
இருசரமுளரிநாண்மலர்சிலையிலிருபொற்பதங்களேற்றவும் *
எழுகதிருலவுவான்வடதிசையிலுடுமுற்றம்வந்துகாட்டவும் *
இடுதுகின்முகபடாமுலைபுணரவுமையைப்பரிந்துவேட்டவர் *

மருமலர்பொதுளிவானுழைவளருமருதைத்தவழ்ந்துசாய்த்திடை *
மடவியரிழுதுதோய்முடைவிரவுதுகிலைக்குருந்துசேர்த்துரம் *
மகிழ்வருகுரவைநாடகமயரவிரலைத்தெரிந்துகோத்திலை *
முனைநடுவுதியின்வாயளைகளவுகொளவற்றநின்றுபார்த்தலை *
பெருகமுதுகொளவானிரைவயிறுநிறையப்பசும்புன்மேய்த்தரை *
பிணையணைகயிறுநார்முடைபடலுமடையப்பிணைந்துதூக்கிய *
பிடவண்படலையாயனைவிபுலவெளிதொட்டணிந்தகோட்டயல் *
பிறைதவழிட்டமால்வரையுறையுமுகிலைப்பரிந்துகாக்கவே (௪)

வேறு.

நறைகமழ்காரகில்சுட்டபுனமுழப்பதம்வாய்ப்பமதனெழுசியப்போத்துகள் *
நடையடிகானவரொற்றிநடவையிற்சுவடோய்ப்பவிடைபறழ்நாலத்தாய்க்கலை *
நனைவிளைதாழ்சினைதத்தியுறைமுடக்குடில்சாய்ப்பமடமயில்கூடிக்கூத்தெழ *
நரையுருமேறுசிலைப்பமுடிவிதிர்த்தரவாற்றல்கெடவிடர்தேடிப்போய்ப்புக *
உறைநுகர்சாதகம்விக்கல்விடவிடைக்குலமாக்கள்படன்முடையோலைக்கீழ்ப்புக *
ஒளியெழுகோபநிரைப்பநிலவுபுட்சிறையாட்டிமகிழ்பெடைமூடிச்சேக்கையில்
உறைதரவோசனைபட்டமணமுதைப்புனம்வீக்கமுனிவரர்சாலைப்பாட்டிரை *
உழைகலையோடுதெவிட்டவனசமொட்டிருள்சீக்குமிளவெயில்காணற்கெக்கற *
அறைகடனீர்விளையிப்பிவிழுமழைத்துளியேற்றுநிலவுமிழாரச்சூற்கொள *
அகன்மடல்கோடல்விரிப்பவெயிறுநட்டுளைதூற்றிநெடுமயிரோனச்சாத்தழ *
அகழ்படுகூவல்கொழிக்குமமுதுவெப்பெழமாத்துவதிகுயில்வாயைத்தாட்கொ
அகமகிழ்கேள்வர்தணக்குமரிவையர்க்குளமூட்டுமளவறுகாமத்தீச்சுட [ள
மறைமொழியாளர்வழுத்தியனலொழுக்கவியேற்றுவலம்வருமேரதைக்கார்ப்புயல்
மலர்நிலமாதுகுளிப்பமழைகொழித்தெழநோக்குசுரர்பதிதாளைப்போற்றுதும்
மணிநிரைமேயவெடுத்தகழைமிடற்றிசையூற்றிமலர்புரைதாளுட்சேப்புற *
வனநடுவோடியிளைத்தவழகனைப்பொழில்வாய்த்தகுலமலைமாலைக்காக்கவே (௫)

வேறு.

பரியரையுரத்பிறைநகப்பிணரடிக்கைப்பருப்புதந்தண்டுறைதொறும் *
படியமடைபடுகரடவாய்திறந்திழிமதம்பாயமணியமுனைதோயும் *
முரிதிரைப்பகிரதிகடுக்குஞ்சிலம்பாற்றுமுதல்வனைக்கடவுள்வேதம் *
முறையிடுந்தாமரைத்தாளானைவண்டுழாய்முகிலைப்புரக்கவெள்ளைப் *
புரிமுகவலம்புரிமுழங்கச்சகோரவெண்புட்கிரையளிக்கும்வானம் *
பூத்தமதிகரமொழியவிளைஞரைக்காமன்பொருங்கணைதுறப்பவெழுபண் *
தெரிவண்டுசிறைவிட்டுவப்பக்குணதுவளர்திக்குவெள்ளணியெடுப்பத் *
தேமுளரிதளைவிடப்புவியிரவுவிடவலைத்திருவவதரித்தசுடரோ (௬)

ஊற்[illegible]ந்தேனகிற்காடெறிந்தெயி[illegible]ருமுபுனற்றினைவிதைப்ப *
ஊ[illegible]ழவிடுஞ்சாரன்மலைமுதுகுபொதிவெப்பமுடைதிரைத்திவலைதூற்றி *
ஆற்றும்புனற்சிலம்பாற்றருகுவிளையாடியாயிரம்பொங்கர்தங்கி *
ஆயிரங்குண்டுநீர்மடுவுட்படிந்துவருமானையைக்காக்ககங்கை *

தூற்றுந்தரங்கவொலியிற்றுஞ்சியறுகிளர்ந்தோட்டிணர்விழைந்துசெங்கைத் *
தொளைச்சிறுபறைக்குரலெதிர்ந்திதழிநெடுவனஞ்சூழ்ந்துடலினிலவுவெள்ளரம் *
சாற்றும்பொடிப்பூழிகால்சீத்தெறிந்திறைவிகழைநெடுந்தோள்வரிக்கும் *
கரும்பினிற்கைவைத்துவெள்ளிப்பொருப்பெற்றைகளிகூரவரும்வேழமே (௭)

வள்ளைகானிக்கிச்செழுங்குவளைமென்றுகயவாயெருமைகுழவியுள்ளி *
மடிவளஞ்சொரியமுதமடுநிறைப்பக்கமலமண்டபத்தரசவன்னப் *
பிள்ளையாலும்புனறுறந்தமுதருந்திவெண்பேட்டிளந்தாயெகினம்வாய் *
பெய்யிரைதெவிட்டுமகன்மாலிருஞ்சோலைப்பிறங்கன்முகிலைப்புரக்க *
கள்ளையூருந்தருத்தறியுணுமற்றேவகன்னியர்களுஞ்சூழநாண் *
கழலாமலைராவதப்பெரும்பகடழற்கானம்புகாமலமுதம் *
கொள்ளைபோகாமற்புரந்தரன்படுசிறைக்கூடம்புகாமல்வெற்றிக் *
கொளுந்தாமலகனெடும்பொன்னகரளிக்கின்றகோழிப்பதாகையோனே (௮)

வேறு.

புடைவளராரப்பரியனைபேரப்புதறலைசாயத்துடிபடவிருகரை *
புகர்மணிவாரிக்குனிதிரைவீசப்புனலுமிழ்வாரிக்குருகெழநடுவுயர் *
திடரகழாநெட்டகழ்திடராகச்சிறைபொரும்யாணர்ப்பரிபுரநதிவரு *
சினைவளர்சோலைத்திருமலைவாழ்கைச்சிலைமுகில்காவற்புரவலன்வெளிபொதி *
கடையிருள்வேர்விட்டெழுமுழுமேனிக்கடல்விடுசோரிப்புலவெழுவடிபுரி *
கவைபடுசூலப்படைதொடுபாணிக்கனல்பிழிவேணிச்சுடர்மணிதிரைவிரி *
படமுடிநாகப்பரியுபவீதப்பலிகொள்கபாலப்புயலுருமெறிகுரல் *
படுசுருடோகைச்சுழல்விழிஞாளிப்பணிமுதுகேறித்திரிதருமிறைவனே (௯)

வேறு.

வருபுனலவனிபுதைப்பக்கோட்டின்முழுகிநிமிரவலைவறவெடுத்தவள் *
மதமலைகரடமுடைத்துச்சாய்க்கும்வெளியகரியின்முதுபிடர்புரப்பவள் *
மரகதவரைறுதிரட்டிக்கோட்டுநெடியபசியகளமயிலகைப்பவள் *
மலர்பொதுளிதழிதழைப்பப்பூக்குமமுதமொழுகுமதிவகிர்முடிப்பவள் *
இருகடைவிழியுநெருப்பைக்காற்றுமலகைசுழலவருபிணனுகைப்பவள் *
இமையவர்வயிறுநிறைக்கத்தேக்கியமுதுகருணைகடைவிழிபழுத்தவள் *
எறிவளையுதறுசிறைக்கொத்தேற்றையெகினநடவுமறைமொழிமிடற்றினள் *
எனவிவருலகுதுதித்துப்போற்றுமெழுவர்முளரியடிமுடியிருத்துதும் *
அரன்முதலெவருநினைத்துப்பார்த்துமறியவரியவிழைபெருமயக்கனை *
அகிலமுதரமடுக்கட்பூத்தகமலநறியநறைபொழிபொகுட்டனை *
அழகியகுரவைநடத்துக்கேற்பவொருகைநடுவணலமருகுடத்தனை *
அலைகடலமலையுதித்துத்தோற்றவுருவுவிளையுமரவறுகணிப்பனை *
விரியொளியுததிகொழித்துக்கோத்தவழி[illegible]பரமபதமுதுபுரத்தனை *
விடையுரமுழுதமருப்புக்கீற்றிலிடையர்மகளிருழுமுலைமுகட்டனை *
விரிதலையருவிதெழித்துத்தாக்குமெழிலிதவழநிலவியபொருப்பனை *
விளையிளநறவுசுழித்துத்தூற்றுதுரவமுகிலையழகனையளிக்கவே (௰)

வேறு.

விரிதடமத்தகத்துச்சிதாழ்சுழிக்கடல் *
விளைகடம்விட்டொழுகவெட்டுவாரணத்தினர் *
விரவுஎநெற்றியிற்கொட்டும்வாலெழிற்குரம் *
விரைபரிபெற்றிரட்டித்தவான்மருத்துவர் *
இருகடையுட்குழைத்தொற்றைமேருவிற்றெருடும் *
இறையவர்பத்தொடொற்றித்தவேறுகைப்பவர் *
இருபதிலெட்டொழிப்பித்ததேர்திரப்பவர் *
எனவிவர்தொக்களித்தற்கியாம்வழுத்துதும் *
சொரிபருமுத்திணர்க்கக்குபூகநெட்டிலை *
தொடுசடைநெற்குலைக்குப்பைநாவளைத்தழு *
சுரிவளைமட்கைப்பற்றமேதியுட்குளி *
தொடுகுளமுக்குளித்தெற்றுநீரொலிப்பெழ *
மரையுயர்பொற்பறக்கொட்டைபாழ்படச்சிறை *
மடவனம்விட்டெழப்பெட்டவாளைசெய்ப்புகும் *
மலர்வதிபுட்குலக்கத்தருதொத்தளி *
வளர்பொழில்வெற்பினிற்பச்சைமாறழைக்கவே (௰க)

காப்புப்பருவம்முற்றும். ஆ திருவிருத்தம் - ௫௰.

இரண்டாவது.

செங்கீரைப்பருவம்.

சுருள்விரிமுழுமுதல்வாழைக்கூனற்குலையினின்மிடறுடைபூகப்பாளைத் *
தலையினில்றைநடுவிண்டாழுஞ்சீதச் *
சுனையினின்முகைநெகிழ்காவித்தாழிப்புடையினினெடுமணல்வாரித்தூதைக் *
கலனணிமகளிர்கரங்கோலுஞ்சாலைச் *
சுவரினிலலமருமூசற்காலிற்படுவினிலொழுகியசோனைத்தேனிற் *
சுழல்படுமளிகள்குடைந்தாடுங்காவிற் *
சொரியுமுளுடல்பொதியோலைத்தாழைப்பரியனையினின்மறிதாகைத்தேடிக் *
கவரிகண்முலையில்வழிந்தூறும்பாலிற் *
கனைதவழ்முரிதிரைபாய்நெட்டோடைச்சுழியினில்வழியினினீர்குத்தோதைச் *
சிறையினின்மளவரலம்பாயுஞ்சாலிற் *
கழனியிலலைதிரள்காய்நெற்சோலைத்தலைவளைகுலையரிதூரிற்றாமக் *
குழலிடைமடவியர்வண்டோடுஞ்சூடிக் *
கடையி[illegible]ழுதறியதாரிற்றுவிப்புலவெழுமுதுசுறவாளைப்பாய்சுற் *
றகழியிலருமழைகண்சூழும்பானுக் *
கதிர்[illegible]புரிசையிலூரிற்போரிற்றெளியினினடவினில்யாணர்க்கானற் *
றுறையினின்மதுரம்விளைற்தோடும்பாகிற் *

பொருபுனலெழுவரிவாளைப்பூசற்படவிடுபெருமடைவாயிற்சாதித் *
தொடரினறுவமைசிந்தாரம்போலப் *
பொதிமுகையவிழ்மலர்வேரிப்பாயற்றுணைவிழிதுயில்வதிமேதிப்பாழிச் *
சுவலினில்வனசமுகங்காலுந்தாதித் *
புழைபடுநெடுநிலைநாளப்பானற்கழியினின்மதனடுசாபக்கானிற் *
சரிகயலணிவியெழுந்தேறுஞ்சாரித் *
புதல்படுதுகிர்கொடிமூடித்திகைக்கடவியிலிளவெயிலேறுய்பொற்பூழித் *
தெருவினிலிளைஞர்கணின்றாருந்தேரித் *
திருவளர்கடிமனைமாடத்தேணிப்பழுவினிலவுமிழ்தூவிப்பேடைக் *
குருகெழுநதியலைசென்றேறுங்கூலத் *
தினில்விளைபுனவிதண்மீதிற்கால்பட்டுடலுளைமணிபொதிசூலைக்காலச் *
சுரிமுகவரிவளைவந்தூருஞ்சாரற் *
திருமலையழகதடாகத்தோடைப்புகர்முகமதகரிகூவச்சேனைப் *
பிடர்வருமழைமுகில்செங்கோசெங்கீரை *
திருமடமகண்மகிழ்கூரப்பாடக்குருமணியிடறியமார்பிற்பீடத் *
திணையிடுமழைமுகில்செங்கோசெங்கீரை (௧)

வேறு.

தொளைபடுகரடமூற்றெழுத்தேங்கிவழிமதம்வண்டோடுஞ்சாயச் *
சுழலவருபெடையெனுக்கரத்தூர்ந்தபுயவெருடல்கண்டேடுங்காதற் *
களிவருபிடிதழீப்பணைச்சார்ந்தகறையடிமென்றூர்வங்கூரக் *
கவுளுழைசெருகிநாட்பிறைப்போன்றநகநுதிமண்சீவுந்தூளைக் *
குளிர்புனலலையவாட்டுடற்பாங்கர்வழியவெறிந்தாரந்தூவக் *
குளிறியவருவிநீர்க்குரற்கேன்றுகரிநிரைகண்சாயுஞ்சாரற் *
றெளிமதுவொழுகுகாக்கிரித்தோன்றுமழைமுகில்செங்கோசெங்கீரை *
திருமலையழகவாக்கிசைக்காம்பமழைமுகில்செங்கோசெங்கீரை (௨)

வேறு.

இருவிழிசெவந்துகயலொடுமெயங்கவெறியுமாநீரோடைகுடைந்தாடி *
இடைவெளிநுடங்கவிருபுறம்விழுந்தகயிறுகால்பூணுசலுதைந்தாடி *
ஒருமுறையகங்கையொருமுறைபுறங்கையறையவேர்வாநால்வரபந்தாடி *
ஒருபதமகண்டநிலவுபுகழ்கொண்டமுதன்மைபாடாவேழுகழங்காடி *
வருகுறவர்தந்தமடமகளிர்வண்டல்விழவுமாறுநீர்பொதிமஞ்சாடு *
மதியுழவழிந்தவமுதநதிபொங்கவருடைகாலாழ்வேரவிளஞ்சாரல் *
அருவிவரைநின்றவழகவிதழ்ப்பம்புதுளவமாலையாடுகசெங்கீரை *
அருமறைவிரிஞ்சனிமயமயில்கொண்கனமரர்கோவேயாடுகசெங்கீரை (௩)

முலையமுதலம்பிவிழநெடுவரம்புகுறியகாலாழ்மேதிகயம்பாய *
முருகிதழ்பொதிந்தகுவளைகண்மயங்கவிடறிவாலால்வாளைவெருண்டோ[illegible] *
இலைதலைவிரிந்தகமுகமடல்விண்டமிடறுவாய்சூல்பாளைபிளந்தேகி *
இமையவருந்துமதியமுதகும்பமுடையநீர்மேய்மேகவிசும்பூறி *

மலையுடல்குளிர்ந்துவிடவெளியெழுந்துமுழுகுதியாடாலைநறும்பாகு *
வழியும்வயன்மஞ்சளிலைமிசைவிழுந்துகளிறுபோலேசாரன்மணந்தோதை *
அலையருவிதுஞ்சுமிடபமலைநின்றதுளவமாலேயாடுகசெங்கீரை *
அருமறைவிரிஞ்சனிமயமயில்கொண்கனமரர்கோவேயாடுகசெங்கீரை (௪)

வேறு.

இருகுழைமதர்விழிகிழிப்பவலமருமகிழ்குரவைதொட்ட *
பொதுவியரோதிபுறந்தாழ *
இளநிலவுமிழ்மதிபகுத்தசிறுநுதல்குறுவெயர்முளைப்ப *
அமைபொருதோள்புளகங்கூர *
மரகதவளையகலமுற்றதினிவருசுரர்பதிவருத்தம் *
இலையெனவார்வம்விளைந்தோடி *
வளைவெளிகுழுமிநடமிட்டதெனவொசிகொடியிடையொளிப்ப *
இளையபயோதரநின்றாட *
விரியுலகமுமுலகொடுக்குமுதரமுமசையவலர்செக்கர் *
மலர்புரைதாள்கள்செவந்தேற *
விரைகெழுதுளவுநறைகக்கவொருகரமிசைகுடமுருட்டி *
இசைவழியாடுபரந்தாம *
அருவினைபுறமிடவெருட்டியடியவரளவினருள்வைத்த *
மழைமுகிலாடுகசெங்கீரை *
அளியுழுபொழில்புடையுடுத்தவுடுபதிதவழிடபவெற்பின் *
மழைமுகிலாடுகசெங்கீரை (௫)

வேறு.

முளைக்குந்திருப்பாற்கடற்பெருஞ்சூன்முலைமுகக்கண்கருமல்வட்ட *
முகமதிசெழுப்புருமற்பச்சைமரகதமுகடிளகியொழுகுபாடம் *
விளைக்குங்குழம்புதோய்த்தெற்றுபலநூலென்னமெய்ப்பசுநரம்பெடாமல் *
வேய்நெடுந்தோள்கண்மெலியாமலாலிலைவயிறுவீங்காமன்மனைமதிற்பால் *
வளைக்கும்புகைப்படலைமண்டொடாமற்சாலவயவுநோய்கூராமனுள் *
வளர்திங்கள்பத்தும்புகாமற்பெருந்தூணம்வாய்த்தகோளரிகளித்துத் *
திளைக்கும்பெடைக்குருகுசூழ்சிலம்பாற்றிறைவசெங்கீரையாடியருளே *
தேவர்க்குமலர்வருந்தேவிக்குநாயகன்செங்கீரையாடியருளே (௬)

சாய்க்குங்கடும்புனல்பரந்தோடவுரகனற்றருணமணியணவுகூட்டுத் *
தாழ்கடம்பிற்குதித்தாடலுங்கொங்கையத்தடநெடுங்கிரிசுமந்து *
மாய்க்குமெனுசுப்பிளங்கோவியர்வளைக்கரமலர்த்துணைபிணைத்தாடலும் *
வட்டவாய்முடைபடுங்குழிசியித்தீயாடிவழியுமின்பால்பதத்திற் *
றோய்ந்தயிர்த்தலையின்மத்தெறியமிழுதுணத்துளவோடுகரியமேனி *
துவளநின்றாடலும்முன்புள்ளவிப்போதுதொண்டர்தம்வினையிரண்டும் *
தேய்க்குந்திருத்தாள்குனித்துநின்றழகனேசெங்கீரையாடியருளே *
தேவர்க்குமலர்வருந்தேவிக்குநாயகன்செங்கீரையாடியருளே (௭)

முருகுண்டுறாகிளைம்பெடைவண்டியாழினிசைமுரலவளிதடவவாடும்
முகைமுகமுறுக்குடைந்தவிழ்தரும்பூவைசிரிமுதகுவலம்வந்துவீழ்ந்து
கருகுந்திரைப்பரவைமேய்ந்தகல்விசும்பாடுகருவிமழையாடுகொள்ளைக்
கண்ணகன்பொய்கைக்கருங்காவியாடிளங்கருவிளந்தொகுதிபிள்ளைக்
குருகுஞ்சலஞ்சலமும்விழிதுஞ்சுதுஞ்சாகொழுந்திரைகொழித்ததிவலைக்
குளிர்புனல்பரந்தாடுகாளுந்தியெனவலைகொதிப்பக்கடுங்கார்முகம்
செருகுங்கணைக்குருசிறிருமேனிதுவளநீசெங்கீரையாடியருளே
தேவர்க்குமலர்வருந்தேவிக்குநாயகன்செங்கீரையாடியருளே (௮)

சுறைபாய்ந்தகுலிசப்படைப்பாகசாதனக்கடவுளும்விபுதர்குழுவும்
கடும்பொடுகடும்பசிகெடுத்தருந்தப்பணக்கட்செவிப்பாப்பெயிற்றுப்
பிறைபாய்ந்துகாந்துங்கடுங்காளகூடவெம்பேழ்வாய்திறந்துருத்துப்
பிடித்துக்குதட்டியுமிழ்மிச்சிலும்போகமலர்பிரசங்கொழித்திறைக்கும்
அறைபாய்ந்தநீருடற்கழுவிநெடுவெண்ணிலாவமுதுணுமதியளிகும்
ஆடுதலையருவிபாய்திசைநான்கும்வெளியின்றியளிகோடிபுடையலைக்கும்
சிறைபாய்ந்தவளிதருஞ்சோலைமலையழகனேசெங்கீரையாடியருளே
தேவர்க்குமலர்வருந்தேவிக்குநாயகன்செங்கீரையாடியருளே (௯)

ஏற்றுவண்டறுகால்குடைந்தாடுபொங்கர்விளையிளநறுந்துளி தூங்கியும்
இருளுடன்முசுக்கலைகுதிப்பப்பசுந்தேனிழிந்துமதிதவழநடுவு
தூற்றுவெண்டிரையமுதுசுழியெறிந்துந்திரைத்தொடுகடற்புனன்முகந்து
சூற்கொண்டகருவிமுகில்விடரியுந்நாளத்தொளைக்கைப்பொருப்புந்தியை
ஊற்றுவெங்கடநீர்கொழித்துமகவிதழ்நெரிந்துடையுடம்வண்டுளவமாலை
ஒழியாதுமதுவோடவுனதுசெந்திருவின்முலையுழுதலாவிளகுகளபச்
சேற்றுறுப்புயம்போலசும்பருமலைவாணசெங்கீரையாடியருளே
தேவர்க்குமலர்வருந்தேவிக்குநாயகன்செங்கீரையாடியருளே (௰)

குரைக்குந்திரைத்தரைப்புரவுபூண்டரசிளங்கோமகனெடுத்தசெங்கோல்
கோநகரிலங்கையிற்டரிதிதேர்பூண்டவேழ்குரகதந்தூண்டுமுட்கோல்
கரைக்குங்கடாக்களிற்றமரோசனெடுநாட்கடுஞ்சிறைகிடந்தகூடக்
கபாடந்திறக்கின்றதிறவுகோனறவொழுகுகமலமகள்விழியினுள்வாய்
உரைக்குங்குழம்புபடுமஞ்சனக்கோல்பிலத்துள்வீழுநான்மறைக்கும்
ஊன்றுகோலாகமுடிபத்துடையகள்வன்மேலொருகோலெடுத்துமுகிலைத்
திரைக்குந்துணர்ச்சோலையிடபகிரிநின்றமுகில்செங்கீரையாடியருளே
தேவர்க்குமலர்வருந்தேவிக்குநாயகன்செங்கீரையாடியருளே (௰௧)

செங்கீரைப்பருவமுற்றும். ஆக திருவிருத்தம் - ௪௧.

தாற்பருவம்.

உடலியலவுணனாட்டியநெடியதானுவேசாநால் *
உகம்வருமரவுதோற்றியவருணநானுரூபாநாள் *
முடியிடைமுதலிலாத்தனியுறையுமூவாமூதாளா *
முனிமகமுடிவுகாத்திடுசரணசாலாகார்வானு *
மடிதிரைபுறவுமேய்த்துழலிளையகோபாலேசாவான் *
மகிதலநிறைவுகாட்டியகரியமாயாமாகாயா *
அடியிணைசுருதியேத்திடுமழகதாலோதாலேலோ *
அரவணையுததிமேற்றுயிலழகதாலோதாலேலோ (௧)

அடியவரளவினுக்கியகருணையாசாபாசாபூ *
அயனொடுவயிறுசூற்கொளுமுதியலோகாலோகாதே *
மடலவிழ்கமலவீட்டுறைவனிதைலீலாகாராநேர் *
வருசகடுடையநீட்டியசிறியதாளாதாள்சூடா *
முடியுடையவுணரோட்டெழநடவுசேனாரூடாபாண் *
முரலளிநறவுவாக்கியதுளவுதோடோயாமோதா *
உடுபதியிடறுகாக்கிரியழகதாலோதாலேலோ *
உடைதிரையமளிமேற்றுயிலழகதாலோதாலேலோ (௨)

வெருவரநிரயமூட்டியகொடியதீவாய்வீழாதே *
விழைவுறுமடியர்வீட்டுறநயமில்கோதாய்வேதாநால் *
அருமறைமுதன்மைகீழ்ப்படவமுதமாராவாயாலே *
அருள்குடமுனிவனுத்தமிழ்புனையுநூலாலோவாதே *
இருபுயம்வகுளநாற்றியமதலைமாறுபாடாய்நீ *
எமையெனவழுதிநாட்டுளகுருகைமூதூராழ்வார்பால் *
உருகெழுசிறுகனீர்த்திடநடவுதாளாதாலேலோ *
உடைதிரையமளிமேற்றுயிலழகதாலோதாலேலோ (௩)

தொடுகடலலையின்மோத்துறமுதியகோண்மீன்மேயாமே *
துகள்வெளிவயிறுபோய்ப்புகநிலவுதீயேழ்நாமேயா *
அடுபசிதணியவேற்றெறிவளியினுவாயோடாமே *
அரிதுசிர்பொரியமோட்டுடலலைகையூர்தேரோடாநீர் *
இடுமணல்சுழலவார்த்திரநிவகமேகாவாய்காவாய் *
இருநிலம்வீடவெடாச்சிலைவலியகால்பூணுண்வாயே *
விடுமடல்புனைவிழாப்பொலிசயிலநாடாதாலேலோ *
விரிதலையருவிதூக்கியசயிலநாடாதாலேலோ (௪)

மழைபடிகடலுலாத்திரிபடவுசூழ்பாய்மீதேபோய் *
மடமயிலகவியாட்டெழவளைகள்கால்சூறாதாயா *
அழியபுறவுகூட்டுணவரிகொள்போர்மேல்வாமானேர் *
அடிவிழவுகளவீற்றுளவிளைபசேதாவாய்பாய்பால் *

எழுதினைசவரவேட்டுவர்வலைகள்பெருவாலாலே *
எதிசுறவறையநாட்டிதணடுவுசூழ்கால்கீழ்மேலாய் *
விழநிலம்விரவுகாப்பயில்சயிலநாடாதாலேலேலா *
விரிதலையருவிதூக்கியசயிலநாடாதாலேலேலா (௫)

வேறு.

முடக்குந்திரைப்பாலாழிநெடுமுகட்டிற்றுயிலவிருசெவியில் *
மூலமென்னுங்குரல்புகுமுன்முளரிப்பொகுட்டுவீட்டிலொற்றை *
வடக்குங்குமச்சேற்றிருகொங்கைமங்கைவிளைந்ததெதுவென்று *
மலர்க்கைநெரிப்பவரவரசுவணங்கவுதறிவிசும்பிமைப்பிற் *
கடக்குங்குடகாற்றெறிசிறையக்கலுழச்சேவற்பருமபிடர்க் *
கழுத்தின்மேற்கொண்டடப்புள்ளைக்கால்கொண்டணைத்துவிண்பறந்து
தடக்குஞ்சரத்தின்முன்சென்றதலைவாதாலோதாலேலோ *
சங்கத்தழகாவிடபகிரித்தலைவாதாலோதாலேலோ (௬)

எடுக்குமிழுதோடமுதோடியேகத்தொடருமசோதைகரத் *
தெட்டப்படவுமொருவருக்குமெட்டப்படாதபுயல்புயலைத் *
கடுக்குந்திருமேனியிலடிக்குங்கைமாறிருப்பப்பின்னுதவும் *
கைமாறிலாதகடல்பசியகனகவுடுக்கைத்திருமங்கை *
உடுக்கும்பாசங்கிடப்பவுளத்தொன்றின்பாசமிலாதபச்சை *
ஓங்கலென்றுமறைநாலுமுரைப்பவிரவியுருட்டாழி *
தடுக்குந்திருமாலிருஞ்சோலைச்சயிலப்புயலேதாலேலோ *
சங்கத்தழகாவிடபகிரித்தலைவாதாலோதாலேலோ (௭)

யாழுங்குழலும்பழுத்தமொழியிடையர்மகளிர்குழைகிழிய *
எறிந்துசெவந்தவிழிவாளியிருக்கும்பகுவாய்த்தூணியலை *
சூழுங்கடலீன்றளித்தமணிதூற்றுங்கதிர்வெப்பொழியநிலத் *
தோகைமுகத்துமகரந்தந்துளிக்குஞ்சிவிறிதிருமார்பில் *
வாழுங்கமலப்பொகுட்டுமயின்மலர்த்தாட்டுணையிற்பொதிந்ததுகள் *
மாற்றும்பசும்பட்டாடையென்னவரைத்தோள்கிடக்குமளிப்படலம் *
தாழுந்துளபத்திருப்பள்ளித்தாமப்புயலேதாலேலோ *
சங்கத்தழகாவிடபகிரித்தலைவாதாலோதாலேலோ (௮)

நறைக்கட்பொகுட்டுமலர்குவியநளினந்திகைப்பமுகைக்குமுதம் *
நாட்பூவெடிப்பத்திகைப்பவெறிநளிநீர்க்கயத்துளுறைநேமிச் *
சிறைப்புட்பேடையுடல்பிரியத்திகைப்பச்சகோரநிலவேட்கத் *
திகைப்பவிலக்குவதிதேடத்திகைப்பப்பறவைபார்ப்புள்ளிப் *
பறப்பத்திகைப்பநறைப்பொழில்கள்படியத்திகைப்பவேள்சிலையிற் *
பாணங்கொளுவத்திகைப்பவெயில்பம்புஞ்சுடரையெஃலெனவான் *
மறைப்பத்திகிரிதொடுஞ்சோலைமலையிற்புயலேதாலேலோ *
மந்தாகினியும்பரிபுரமும்வளரும்பதத்தாய்தாலேலோ (௯)

வேறு.

மகரங்குளிறுங்கனைகடன்மேய்ந்துயர்மலையின்றலை துஞ்சும் *
மழைமுகிலென்றெக்காலமுமிதழிமலர்ந்தலர்பொன்னூற்றச் *
சிகரந்தொறுமடமயினடமாடச்செக்கர்க்கோபமெழச் *
சினைவளர்காயாவகமடலூழ்ப்பச்சிதறுந்தளிபகுவாய் *
நுகருஞ்சாதகமணவத்தளவநுனைமுகைவிடமின்போல் *
நுண்ணிடை துவளச்சதிரிளமங்கையர் நுளைவிரிசுனைகுடையத் *
தகரங்கமழுங்குலமலைதங்குந்தலைவா தாலேலோ *
சங்கந்தவழும்பரிபுரநதியின்றலைவா தாலேலோ (௰)

வேறு.

அளிக்குந்தளைக்கங்காந்தவுணனகங்கைநிறைந்தநீர்வார்க்க *
ஆழிப்பொருப்புவேலியுலகடிக்கொண்டோங்கிமழைக்கருவிண *
துளிக்குங்கமலமிரண்டுமறைதோயுங்கமலமொன்றுமொளி *
தூற்றுஞ்செக்கர்த்துகிருமிருசுடருஞ்சுரும்பினிளைபரந்து *
களிக்குந்தோட்டுநறைத்துளவக்காலுஞ்சுமந்து வெளிவளரும் *
கரியபூவைமதிதவழ்ந்துகாலுமமுதப்பெருக்கிலுடல் *
குளிக்குஞ்சிமையவிடபநெடுங்குவட்டுகுரிசிறாலேலோ *
குன்றமெடுத்துமழைதடுத்தகோவே தாலோ தாலேலோ (௰௧)

தாற்பருவமுற்றும். ஆ திருவிருத்தம் - ௫௨.

நான்காவது.

சப்பாணிப்பருவம்.

ஒருமுறையுனதுவயிற்றுமலர்க்குளுதித்தவனப்பாகன் *
உமைமடமயிலையிடத்திலிருத்தியிருக்கும்வலப்பாகன். *
உட்லியலவுணருடற்கறைகக்கவழுத்துமுகிர்ச்சேனம் *
உததியினடுவுதயிற்சுவைமுற்றியவட்டவணைச்சேடன் *
இருள்புறமிரியதிரைக்கதிர்விட்டவலக்கண்வெயிற்பானு *
இதழ்பொதிகுமுதமலர்த்துமிடக்கணெழுக்கமுதப்பானு *
எழுதுதலரியமறைத்தமிழ்முற்றவடித்தவிசைப்பாணன் *
இழுதெழுமுடைகமழ்கொச்சையிடைச்சியர்பெற்றகுலப்பூவை *
முருகுடைகமலமலர்த்தவிசுச்சியிருக்குமனைத்தீபம் *
முகின்முதுகிடறுகடற்றலைவட்டமளிக்கும்வெதிர்க்கோலன் *
முகைநெகிழ்தொடையன்முடித்துதறித்தருசொற்புதுவைக்கோதை
முதுகிடவிபுதர்மிடற்றுமுழக்குகுரற்கடவுட்கோடு *
குருகுலநிருபரமர்க்கணிருட்டையழைத்தபகட்டாழி *
குரைகழலடியைவழுத்தியுளத்தின்மகிழ்ச்சியுறப்பாடு *
குனிதிரையெறியருவிக்குலவெற்பிறைகொட்டுகசப்பாணி *
குவலயம்வெளியுறவைத்தபதப்புயல்கொட்டுகசப்பாணி. (௧)

வேறு.

விழிதுயில்பெறமணிநெற்றிகுயிற்றியதொட்டிலலைத்தேழும் *
விரைகெழுபுழுகுநெய்பொத்திமுகத்தலைபித்தைமுடித்தேழும் *
எழுகதிர்விழுபொழுதுப்பிலைசுற்றியனற்றலையிட்டேழும் *
இளநிலவுமிழ்மதிசுட்டுமுனக்கெதிர்முற்றமழைத்தேழும் *
அழகுரறணியமருட்டியணைத்தொசியொக்கலைவைத்தேழும் *
அடிதொழுமிமையவர்வர்க்கமுமொப்பவுவப்பமுடத்தாழை *
கொழுமடனகவளிபுக்குழுவெற்பிறைகொட்டுகசப்பாணி *
குவலயம்வெளியறவைத்தபதப்புயல்கொட்டுகசப்பாணி (௨)

திருவயிறமைவரவைத்தருள்வைத்தவளப்பிலுயிர்ப்பால *
திரைவிரிபுனல்வெளிபொத்துவடத்திலைமுற்றுதுயிற்பால *
வரிசிலைகடைகுழையக்கடல்சுட்டவிழிக்கடையுட்கோப *
மழைமுகிலெறிதுளிதட்டுமலைக்குடையிட்டநிரைக்கோப *
முருகெழுமிளநறைகக்குபசுத்தபுனத்துளபத்தாம *
முடைகமழிடைமகள்கட்டவொடுக்கியசிற்றுதரத்தாம *
குருகுகடலையருவித்துயில்வெற்பிறைகொட்டுகசப்பாணி *
குளிர்மதிதவழ்பொழில்சுற்றியவெற்பிறைகொட்டுகசப்பாணி (௩)

திருமகடழுவியபச்சையுடற்புறமுத்தவெயர்ப்பேறத் *
திரைதருமமுதெனவூற்றிதழிற்றுளிசுற்றுதரத்தாரக் *
கருகியசுரிகுழலுச்சிமுடிப்பிணிவிட்டுமுகத்தாடக் *
கதிரிளவெயிலெழுமுச்சிமிலைச்சியசுட்டிநுதற்றுழப் *
பெருகிளநிலவுமிழ்கொத்துவளைக்குலமிட்டபுயத்தாலப் *
பிணிநெகிழ்நறைபிழிசெக்கமலத்துணையுட்கைசெவப்பூறக் *
குரைமதுவொழுகுதொடைத்துளபப்புயல்கொட்டுகசப்பாணி *
குளிர்மதிதவழ்பொழில்சுற்றியவெற்பிறைகொட்டுகசப்பாணி (௪)

வெறு.

இடைதடுமாறக்குழல்புறமலையமெய்ப்பூணொலிப்பவொலியா *
இருகுழையூசற்றெழில்வரநிலவுமுத்தாரமொப்பமுலைமேல் *
முடைகமழ்தாழிப்புறமெறிதிவலைதொத்தாவெளுப்பமதிபோல் *
முகம்வியர்வாடக்கயிறுடல்வரியுமத்தாலுழக்கியுறைபால் *
கடையுமசோதைக்கருள்வரவிழிகள்பொத்தாமயக்கியுடனே *
கரமலர்கோலித்தடவினிலிழுதுதொட்டோடுபெச்சைமுகிலே *
தடமலிசோலைத்திருமலையழகசப்பாணிகொட்டியருளே *
தளையவிழ்தாமத்துளவணியழகசப்பாணிகொட்டியருளே (௫)

வேறு.

வாராட்டுகொங்கைக்குறுங்கண்டிறந்தூறிவழியுமின்பாலருத்த *
மலர்விழிக்கஞ்சனங்குவளையெழில்படவெழுதவரிகுழற்புழுகுபெய்ய *
நீராட்: மஞ்சட்பசும்பொற்பொடித்திமிரநிரைவளைகரந்தொடுப்ப [ப்
திலவொழுகுவெண்ணீறுபிறைநுதல்விரிப்பவெயினிழன்மணித்தொட்டிலாட்டி

ராட்டவொருவமற்றண்டகோளைவிண்டுபோய்ப்பெரும்புனலிலாலம் *
பாசிலைப்பள்ளியிற்றுயில்பசுங்குழவியேழ்பாட்டளிசிறைக்காற்றினல் *
ராட்டவண்டுளரவுதேனொழுகுமணிமார்பசப்பாணிகொட்டியருளே *
தனையேழுமொருபொழுதுபோன்கங்கொண்டமுகில்சப்பாணிகொட்டியருளே.
(௬)

பாட்டாயிரஞ்சுரும்பறைபொழிற்புதுவையிற்பாவைகுழல்சூடியதறும் *
பனிமலர்ச்சருகுதேடிக்குப்பைநாடொறும்பயிலாமலவள்புனைந்த *
தோட்டாரிதழ்ச்செவ்விமாலைதருவேமணிச்சூட்டராவணைசுருட்டிச் *
சொற்றமிழ்ப்பின்புசெல்லாமல்வண்டமிழ்மாலைசூட்டுபதின்மரையமைப்பேம் *
கோட்டாவெருத்துகட்குடிலில்வெண்ணெய்க்கிரங்கோவிமார்கன்றுகட்டும் *
குறுங்கயிற்றணையுண்டுதில்லாமலாயிரங்குடவெண்ணெய்கொள்ளையிடுவேம் *
காட்டாழைவேலித்தடஞ்சோலைமலைவாணசப்பாணிகொட்டியருளே *
தனையேழுமொருபொழுதுபோனகங்கொண்டமுகில்சப்பாணிகொட்டியருளே.
(௭)

பூக்கும்பொலன்றாமரைத்தாளின்முன்பொத்துபுவியடங்கலுமுந்தியின் *
புடைவைத்ததொப்பலவழைக்கைக்கெனப்பழம்புனிதமறையாரனுட்டத் *
தேக்குந்திரைக்கங்கைநீராடுதண்டையஞ்சீறடியெடுத்துமழலைச் *
செய்யவாயிதழ்ப்பெருவிரற்றலைசுவைத்துவெண்டெண்ணிலாமூரல்கான்று *
கோக்குந்தழைக்கூரைமுடையாடையிற்றுயிற்கொண்டமுகிலுழவரோட்டும் *
கூனுடலலம்பாயவெளிதாவுபகுவாய்க்குறுங்கண்ணவாளைவாலால் *
தாக்குண்டசூன்மேகம்விழிதுஞ்சுமலைவாணசப்பாணிகொட்டியருளே *
தனையேழுமொருபொழுதுபோனகங்கொண்டமுகில்சப்பாணிகொட்டியருளே.
(௮)

திங்கட்புகுந்துபெற்றுவகைமலிதாய்தந்தைதீஞ்சுவைச்சோறளிப்போர் *
செங்கதிர்ப்பொன்கொடுத்துத்தொண்டுகொண்டவர்செழும்புகைப்படலைவானில்
பொங்கக்கிளைத்தெழுகடுந்தழனெடுங்குப்பைபுயலுருமுடன்பகைத்துப் *
பொருகுரற்பகுவாயளுமலிநள்ளிருளுடற்பொசிகழுதுகடையருட்டு *
வெங்கட்குறுங்கானரிக்கொள்ளைகுடவளிவினைந்தெடுத்தெழவிறைக்கும் *
விரிசிறைப்புட்குலமெமக்கெமக்கென்னுமுடன்மீளவுமெடாமலடியார் *
தங்கட்கினருள்கூர்ந்தெழுபிறப்படருமுகில்சப்பாணிகொட்டியருளே *
தனையேழுமொருபொழுதுபோனகங்கொண்டமுகில்சப்பாணிகொட்டியருளே.
(௯)

எட்டுவகையோகத்தினிற்பிரமரந்திரமெழுந்தங்கியங்கடவுளுள் *
ஈரைந்தொடைந்துவெண்ணிறவைகல்வடவயனமீரிரண்டோடிரண்டு *
பட்டுவளர்திங்கள்வருடம்பவனனுதவன்பனிமதிதடித்துவருணன் *
பாகசாதனன்மறைக்கடவுள்வழிகாட்டநீர்பாய்ந்தாடுவிரசைபுக்கு *
விட்டுமூதாவமானன்நீண்டவாதனையும்விட்டழிவின்மெய்படைத்து *
வெண்சங்குமாழியுங்கைக்கொண்டுபரமபதமேவுநின்றொண்டர்மீளல் *
தட்டுமணிமண்டபத்துடனுறையவைக்குமுகில்சப்பாணிகொட்டியருளே *
தரையேழுமொருபொழுதுபோனகங்கொண்டமுகில்சப்பாணிகொட்டியருளே.

அலையுந்துணர்த்தழைக்குடிலிருந்தந்தணர்களரியகடவுளரைவேள்வி
அவியமுதுகொள்ளப்பழம்பாடன்மறைகொண்டழைக்குங்குரற்கற்றுநாள்
முலையுண்டுவண்டறைபொதும்பரினிளங்கிள்ளைமுகமலர்ந்தெழவிளிப்ப
மும்மைமுதலுலகமும்பாழ்படத்தேவரும்முனிவரும்வந்துபம்பிப்
புலையுந்தழற்குழியும்யூபமுஞ்சாலையும்பொரியிடுங்கலனுநெய்வான்
பொங்கிவழிகுழிசியுங்காணுமலமரும்புணரியெழுமிரவிபொற்றேர்
தலையுந்தடங்குடுமியிடபநெடுமலைவாணசப்பாணிகொட்டியருளே
தரையேழுமொருபொழுதுபோனகங்கொண்டமுகில்சப்பாணிகொட்டியருளே. (௰௧)

சப்பாணிப்பருவமுற்றும். ஆ திருவிருத்தம் - ௯௩.

ஐந்தாவது.

முத்தப்பருவம்.

முருகொழுகிருளினறவுகுதிபாயமழுவறுத்தகவட்டகில் *
முருடுசுடுவாசமெழுபுகைவியோமவுடல்புதைப்பமதுத்துளி *
முகிழ்நெகிழ்சாதிமலர்குளவிமூடுபுதலருக்குபுனத்திடை *
முகடுபுதையூழியெழவெயினர்மூரியெருதுரப்பிவிடப்புனல் *
அரவரசுசூடுகுருமணிதிகாயமெனவுடுப்பமுகக்கொழு *
அயின்மெழுகுகூனனுதியின்மணியேறவலனுழைத்துமுழுத்திடர் *
அவல்வயிறுதூரநிரவிமுளைநாறுவிதைபிடித்துவிதைத்திரை *
அளிவிளரிபாடுமடைபொதுள்படீரமுதறநித்துவணக்கிய *
கரியகுரலேனல்புரவுபெறவேலிபுறனிரைத்துநிரைக்கிளி *
கடிகவணிலேனமிரியமணியாரமெறியமத்தவிபக்கிளை *
கதழெரியலாதமெனவெருவியோடவிழைபுனிற்றுமடப்பிடி *
கயமுனியைநாடிநடவையெதிர்மீளவரவொருத்தல்குழித்தலை *
சரிகளையையோட்டியுயர்களையிலேறவிடவழுத்துகுறத்தியர் *
தமதுகுலம்வாழவுனதுபுகழ்பாடிமடையளிப்பமதிக்குறை *
தவழ்வளமேவுமிடபமலைவாணதவ்வளமுத்தமளிக்கவே *
தபனவெயிலேறுபவளவிதழூறுதவளமுத்தமளிக்கவே (௧)

வேறு.

வருமதபொருப்புநடுவெளைமருப்புவயிறுதருமுத்தமொளிகளைத்தபழுப்புறும்
வளைமுளியமுற்றுமனவெழுவனத்துவளரும்வெதிர்முத்தமுடல்கொதிப்பவெ
வரியளியிசைக்குமனமுருகிமொட்டுமலர்வனசமுத்தநிலவுசெக்கர்முகத்தெழும் *
மகிணர்கரமுற்றகலவியிலிறுக்குமகளிர்களமுத்தமுருளுமுச்சியதுக்குணும் *
உருகெழவெளுத்தபிறைபுரையெயிற்றவுரகமணிமுத்தம்விடவழற்பொடிபட்டிடும்
உலகுடலிருட்டுமுகிறுளிதவற்றவுடனெழுகுமுத்தமொழுங்கிருட்டொளியுட்படும்
உடைதிரையுடைப்பவுவரிவிளையிப்பியுமிழுமணிமுத்தநெடியவெக்கர்மணற்படும்
ஒழுகுமடைபட்டமதுமடலுடைக்குமுயர்கமுகமுத்தமரகதத்தபசுப்பெழும் *

வெருவிவலைகட்டவணவியலைதத்திவிழுசுறவமுத்தமயினுதித்தலைமுட்டபடும். *
மிடறெருவியெடுப்பவெழும்வளியுலர்த்தவெளியவளைமுத்தமறவெறித்தெழுநெய் *
விளைகழனிநெற்கண்விரவுபருமுத்தமுலவியவெருத்தகவையடிப்படவிட்புணும் *
விரிகதிர்பரப்பவிலைதழையுமிக்குவிளையுமுழுமுத்தமுரலரைப்பவிழைப்புணும் *
இருநிலமடுத்துமுகமுழுகளிற்றினெயிறுசொரிமுத்தமுறுபரற்கணறுப்புறும் *
இவைதவிரமுத்தமணிலவிரட்டைபடுமொளிமறுக்குமெனவனைத்துமுவக்கிலெம்
எறிபுனலுடுத்ததலையருவிசுற்றுமிடபநெடுவெற்பவிதழின்முத்தமளிக்கவே *
இளமதியொழுக்குமமுதருவிசுற்றுமிடபநெடுவெற்பவிதழின்முத்தமளிக்கவே. * (௨)

வேறு.

உலவைகரிவெப்புவனமடைகுழைப்பவெதிரிசையழைத்தும்விடவாய் *
உரகனைவரித்தகொடிநிருபனுட்கவரிவளைகுறித்துமுறிதோய் *
கலனுதரமெத்தவிடைமகளிர்வைத்தமுடையளைகுடித்துமவர்தாழ் *
கயிறரையிறுக்கியுரலுடனணைப்பவழுதிதழ்நெரித்துமனையாம் *
அல்கையுயிரொக்கவமுதொடுகுடிப்பமுலைதலைசுவைத்துமெறிநீர் *
அலைசலதிவட்டமசிதரைமடுத்துமகவிதழ்செவத்ததுவர்வாய் *
மலரொமர்பொருட்டுமொருமுறைசெவப்பமழலைமணிமுத்தமருளே *
மதியமுதொழுக்குமிடபநெடுவெற்பமழலைமணிமுத்தமருளே (௩)

வேறு.

ஆகத்துணிங்கியுயிர்யாதனையுடற்புக்கனற்புகையிருண்டகங்குல் *
ஆரிருட்பக்கமறுதிங்கடெற்கயனநிலவலர்திங்கள்வழிகாட்டமீ *
மாகத்துநரகம்புகீஇப்பயன்றுய்த்தொழியும்வழிநாளிலந்தவுருவம் *
மாயமூதாவியொடுதபனகிரணத்திமையவரையிமத்துடனடைந்து *
மேகத்துவந்துகும்பெயலினிற்பாரிடன்வீழ்ந்துநளிபுனலோடுநா *
விழையும்பொருட்டொறுமணைந்துபல்லுடறொறும்மேவியிங்ஙனமரவினுள் *
போகத்திரிந்துவரவிளையாடல்புரியுமுகில்பூங்குமுதமுத்தமருளே *
பொறிவண்டுகண்படுக்குஞ்சோலைசூழும்பொருப்பமணிமுத்தமருளே (௪)

ஈட்டும்பெருந்தவமுனிப்புனிதனென்புடலமிரலையுடலதளுடுப்ப *
எரிவிழிப்பிணருடற்பிலவாய்நெடும்பேயிபத்தோலுடுப்பமுனிவன் *
மூட்டுந்தழற்குழியினெய்சொரியநரியுதரமூளெரிக்குழியிலுடலம் *
முழுகுநிணநெய்விடத்தவமுனிதருப்பையடிமுறைபடுப்பக்குடற்கோத் *
தாட்டுஞ்சிறைப்பருந்தடிபடுப்பத்தவத்தரியமுனிகடவுள்யாவும் *
அழைப்பவெங்காகங்கரைந்தினமழைப்பமுனியனன்மகங்காத்தெடுப்பக் *
கோட்டுஞ்சிலைக்கணையினிருதரைக்காய்ந்தமுகில்குழைபவளமுத்தமருளே *
கூராழிகைக்கொண்டவாயிரம்பேராளகுழைபவளமுத்தமருளே (௫)

வளையெடுத்தெழுநாணின்றநீகோபாலமகளிர்சிறுசோற்றினுக்கு *
மடிமணலெடுத்ததர்லுடவிளைத்தும்வானின்மந்தாரமலர்கொய்தநீ *
விளையெடுத்தெறிபூங்கறிக்குமலரொட்டாமல்விரல்குந்தியடிகன்றியும் *
வேழவெண்கோட்டைப்பிடுங்குநீவண்டன்மனைவிளையாடுபாவைக்குவெண் *

திரையெடுத்தெறிபுனற்காய்பிடுங்கிக்கரஞ்சேந்துமுன்றெந்தவென்று
செப்பின்றமாயங்களறிகிலேங்குறமகளிர்செங்கணிழல்குருகுநோக்கி
இரையெடுத்தல்லாமையாலழியுமருவிமலையிறைவமணிமுத்தமருளே
எற்றுந்திரைச்சிலம்பாறுசூழிடபகிரியிறைவமணிமுத்தமருளே (௬)

மட்பாவைதோயுந்துழாய்ப்பள்ளியந்தாமமார்பின்கண்வாய்த்தவந்த
மதியத்துமார்பினுமிருந்தானெனப்பருதிவருபுலத்தொருநான்குதோட்
புட்பாகனும்மறலியுறைபுலம்வெண்ணிறப்புனிதனும்வருணராசன்
புலத்தினிற்பச்சுடர்த்தேவும்வெள்ளிதழ்நறும்பூங்குமுதபதிபுலத்தில்
கட்பாசடைப்பற்பராகவொளிகான்றமெய்க்கடவுளருமுடன்விதிக்கில்
காவல்பூண்செயமங்கைபூதம்வெம்புலிகொடுங்கனைகுரற்சியம்நிற்ப
விட்பால்வருந்திங்களுருவுகொள்விமானத்தின்மேவுமுகின்முத்தமருளே
வெண்ணிலாமதிதுஞ்சுதண்ணிலாவாராமவெற்பமணிமுத்தமருளே (௭)

வேறு.

படைத்துத்திருவைத்தருந்தேவர்பாகசாலைசுட்டிலங்கைப்
பாடிதொலைத்துக்கரும்பேய்க்குப்பாகசாலையளித்தறத்தைப்
புடைத்துத்தருக்குமரக்கர்குழுப்போகநரகவழிதிறந்து
+ புலவுச்சுடர்வெம்மழுப்படைக்கைப்புனிதன்போகநரகவழி
அடைத்துமுதன்மைமுறைமாற்றியடைவுகெடுக்குந்தனிப்பகழி
ஆடற்சிலையினண்கொழிக்குமழுக்குப்போகக்கொடிவிசும்பைத்
துடைத்துத்திவளுமலையிறைவதுவர்வாய்முத்தமளித்தருளே
தோளுன்கைந்துபடைசுமக்குந்தோன்றன்முத்தமளித்தருளே (௮)

வேறு.

தாள்பற்றியேத்தப்புரந்தரன்கரிமுகன்சதுமுகப்பதுமயோனி
தண்ணறுஞ்செச்சையந்தார்முருகனிமையவர்தடஞ்சுருக்கொடியுயர்க்கும்
வேள்பற்றுதீயிற்குளிப்பநுதலுப்பண்விழித்தகட்சூலிசெம்பொன்
வெயின்முடிச்சேனைநாதன்பிரம்படிதாக்கமீதிலெழுமணிகடொத்திக்
கோள்பற்றுவடபுலக்குன்றெனப்பத்துமுன்கொண்டவெண்படிமணந்த
கொண்டறுஞ்செழுநிலைத்திருவாசல்பொலிநங்கள்குன்றின்றுழாய்ப்படப்பைத்
தோள்பற்றுசுந்தரத்தோகையொடுவாழுமுகிறுகிரில்விளைமுத்தமருளே
தொடுகடல்வெதுப்பவொருசிலைகடைகுழைத்தவன்றுகிரில்விளைமுத்தமருளே (௯)

சேடற்கெருத்துளுக்கக்கடற்பள்ளத்திரைத்தலைவரைத்தலையனைத்
தெசமுகக்கடனைவெகுண்டெழும்வானரச்சேனைபராகமண்ட
கூடத்தெழுந்துவான்கங்கைக்குமண்கட்டுகூலம்பசுந்தகட்டுக்
கொய்துணர்த்தருவினுக்காலவாலஞ்சங்குகொட்குமானதவாவியில்
பாடற்சுரும்பூதுமுளரிநெடுநாளமுதல்பதிகொள்ளவள்ளதெய்வப்
பாவையையமரர்புரிவதுவைக்குமுளைநாறுபாலிகைப்பூமியாக
ஆடற்கருஞ்சிலையினிருகடைகுனித்தவன்னம்பவளமுத்தமருளே
அருள்பெருகியலையெறியுமரவிந்தலோசனன்னம்பவளமுத்தமருளே (௰)

உடைக்குந்திரைக்கோளரராவணைத்துயில்கொளுமுனைக்கடுதொடற்கஞ்சியே. *
ஒழுகுமளைமுடைநாறுமணையாடைபல்காலுமுதறிப்படுத்துமீளப் *
புடைக்கும்பெரும்புவன்மீரேழுமுண்டநின்பண்டிக்குமுலைகுடிக்கும் *
பால்செரித்தற்குப்பசும்பனைத்தூட்டியும்பைம்பொற்பொருப்புநீருப் *
புடைக்குஞ்சிறைப்புட்கடாய்வருமுனக்குமொருபுட்டோடலைவந்ததென்று *
புனல்சொரிந்தும்பொதுவர்மங்கையர்மயக்குறப்பொதுவினின்மயக்கியுடுவைத் *
தொடைக்குந்துணர்ச்சோலையிடபகிரிநின்றமுகில்துகிரில்விளைமுத்தமருளே *
தொடுகடல்வெதுப்பவொருசிலைகடைகுழைத்தவன்துகிரில்விளைமுத்தமருளே.

முத்தப்பருவம்முற்றும். ஆகதிருவிருத்தம்-௭௰ [௰௧)

ஆறுவது.

வாரானைப்பருவம்.

மடலவிழ்பொழின்முதன்மேற்படநிமிர்தலைகவிழ்ந்துபார்பூப்பவெறியுமசில்சுடு *
மணமெழுபுனம்விளைகாய்த்தினைகவரமழகன்றுநாநீட்டவகவிவலம்வரும் *
மடமயிலுகள்விடையேற்றிமினெடுமுகடிருந்துதாள்பேர்ப்பவிளையகுறவர்தம் *
மடவியர்விழுகிளியோச்சியவிதண்முதல்பறிந்துகீழ்நாற்றநடுவுதொறுமிய *
விடரகம்வெறுவயிறுய்ப்பெருவெளிபடமுழங்குகோளேற்றையுழுவையரிவிழ *
விரிபொறியவிர்தலைதூக்கரவருணமணிதின்றுவாய்காற்றவிருளுமுகமுசு *
வெளியினில்விழுசிறுபார்ப்பினைவிசையுறவெழுந்துதாயேற்பவழுதநதிபடி *
விடுமடிதிரைகடைவாய்ப்புறமிசையுறுபசும்புலியோட்டவெயினர்தறியணை *
கடகரிகுனியிருகோட்டிளநுதியுழவிழுந்துகார்காட்டவயிரம்வெயில்விடு *
கதிர்மணிமரகதமீர்த்திழியருவிகள்பரந்துவீழ்நாட்டவெறியும்வளிதரு *
கருகியசிறுசிறையீக்கணமலமரவழிந்திருநூற்றுநறவம்விழவிரு *
கனைதவழ்மறிதிரையாட்டியபுனல்சுனைமறிந்துவாய்சாய்ப்பநறியகுவளைகள் *
புடைவிடுமடன்மதுவூற்றெழவகன்மழைபொழிந்துநீராட்டமகரமலையொடு *
பொருகடல்கவர்புயலீட்டியபுறன்மழைதடிந்துதோடேந்தமுளரிநடுவுயர் *
பொருவெனவளையெழுநாட்பொழுதொருசிறுபசுங்கைமீதேற்றகுருசில்வருகவே
புகர்முகமதமலைநூற்றுவர்கெடவிசயனின்றதேரோட்டுமழகன்வருகவே. - (௧)

வேறு.

முடையுறிபெற்றுத்தசுவவினர்வெளுத்தநறியதளவிள *
முகையெனுமெயிற்றின்வழிவிரவுகொச்சையுடையமொழியினர் *
முடலைபடுநெட்டையுடலினரமுக்குமுறுகுமறுவையர் *
முருகொழுகுவெட்சியிதழிநறைகக்குபிடவமுதுமலர் *
இடைவிரவியிட்டகுழையினர்குலத்தின்முதன்மையறன்வழி *
எமதுங்கள்சுற்கமிதுவெனவிதிப்பமுதலுமொருபகல் *
இமின்முகடசைத்துவிழியெரிபரப்பியுதமியுடலினை *
இடியெதிர்சிலைத்துநிமிர்செவிகுவித்துநெடியகவைபடும் *

+அடிகொடுதுகைத்ததுகள்வெளிபரப்பியறவியறுமுகன் *
அயிலொருபுறத்துமழுவொருபுறத்துமுறையிலிருபுறம் *
அலைவறவிருத்திவடிபுரிமருப்பின்வயிரநுதியினின் *
அறுபதினிரட்டியிடையர்கள்புயத்துமுரணும்விடையெழு *
தொடைமணியெருத்தநெரிபடவுழக்கியருணமணிபொதி *
சுறவெறிமழைக்கணிடைமகள்களித்துமகிழவடமிடு *
துணைமுலையுழக்கவதுவைசெய்புயத்தினழகன்வருகவே *
துணர்சினைவிரித்தபொழில்வளர்பொருப்பினழகன்வருகவே. (௨)

வேறு.

மணிபொதியுமோலிபுனையுமுடிதாழவிழுதுவிட்டவிர்சடைமுடி *
வனையவொளிர்பீதவுடையிணையுடாதுதிருவரைப்புறன்மரவுரி *
அணியமலர்மாதுகரம்வருடநாணியுடல்சிறுப்பெழுமலர்புனை *
அடிகருகவானமழைபருவமாறுமயினுதிப்பரலடவியின் *
உணர்வுவறிதாயவறம்வழுவும்வாய்மையுடையசிற்றவைவிடைதர *
உவகையொடுபோனவருமையிலைநாளுமுலையளித்துனதருள்பெறும்
பணிவிடைசெய்தாயொமதுரைமருதுபழமறைப்பொருள்வருகவே *
பருவமழையாடுகுடுமிமலைமேவுபழமறைப்பொருள்வருகவே. (௩)

வேறு.

வினைபுரியுங்கடியவிடபமழல்கடை - விழியுதறுங்கொடியகுருகுவெளியுழ *
சினையிணர்பம்புபயமருதுபுடையுருள் - திகிரிதொடும்பரியசகடுமுலைதர *
அனையெனவந்தடருமலகையிவையிவை - அவுணன்விடும்பணியில்வருமுன்விரைவினி
நனைபொதியுந்துளவனழகன்வருகவே - நமதுபுறந்தழுவவழகன்வருகவே. (௪) [ல்

தடவமுதம்புகையின்முழுகுமனைமுலை - தயிபயிலகன்றலகுசெருகுதிரையுடன் *
அடவிபுகும்பொதுவன்வருவனவனுடன் - அரியவிருந்துவகைபொழியுமழன்முகம்
இடுமிழுதின்பதமுமுறுகுமிலைமனை - இடைதமியன்புகுமுன்முலையிலமுதுண *
மடல்பொதுளுந்துளவனழகன்வருகவே - மறைகதறுங்கடவுளழகன்வருகவே. (௫)

இணைவிழியும்பொலிவுவரவுமடியர்தம் - எழிலுடலம்புளகம்வரவுமுகபடம் *
மணிமுலைபொங்கமுதம்வரவுநிறைமதி - வதனமலர்ந்துவகைவரவுமுனதரை *
அணிமணிபம்பரவம்வரவுமொருமுறை - அடியிணைநொந்தருணம்வரவுமுயர்கண் *
பணவுரகந்துயிலுமழகன்வருகவே - பழமறையின்கடவுளழகன்வருகவே. (௬)

எமதுகருங்குழிசியமுதமுறைதயிர் - எமதுபொலன்குயிலெழரியகுழமகன் *
எமதிடுமண்புனையுமடிசில்கறிமலர் - எமதெறிபந்திழுதுமுறையினிறைதுகில் *
எமதுகழங்குனதுமதலைதிருடினன் - எனவெவரும்பொதுவர்மகளிர்குழுமினர் *
அமையுமிடுங்கலகமழகன்வருகவே - அமலைபழங்கொழுனனழகன்வருகவே. (௭)

வேறு.

திருநாட்டுவந்தெவருமருள்பெறற்கரிதெனத்தெண்டிரைப்பாற்கடற்கட் *
டெய்வநாகணையினிற்றுயில்கொண்டுமீன்முதற்றிருவுருப்பத்தெடுத்துப் *

பெருநாட்டுளங்குநீருலகிற்படாதனபிறந்துபட்டுங்குருதிநீர் *
பெய்யும்புலாற்கூட்டையிழிவெனுதனுவொளிபிறங்கவுட்டாமரைப்பால் *
உருநாட்டியும்நமதுபேரூர்மறந்தானுமொருகாலுரைப்பர்கொலெனு *
உபயகாவேரிநீராற்றினும்வேங்கடத்துச்சியினுமடியர்தங்கள் *
கருநாட்டமறவிடபமலைமீதுநின்றருக்கருணைபொழிமுகில்வருகவே *
கங்கையுந்தொல்லைப்பழம்பாடன்மறையுங்கறங்குதாண்முகில்வருகவே. (அ)

தொழக்களிவருந்தொண்டர்பாசவெம்புரசைசுவல்சுழலவைம்புலனடக்கும் *
தோட்டிவென்றெழுமதம்பயின்மனக்கரிநிரைதொடர்ந்துசிற்றடியையுற்ற *
மழக்களிற்றின்மும்புனிற்றிளம்பிடிகளும்வழியருவியோதைவிங்க *
மழைமதந்தூங்குங்கவுட்கரியொருத்தனும்வந்தருகுலாவவிண்ட *
பழக்கனித்தீஞ்சுளைப்பலவுசொரிதேனுறுபாயுஞ்சிலம்பாற்றயற் *
பாசடைத்தாமரைப்பள்ளநீரள்ளவித்பாயுமேற்றெருமையேய்ப்ப *
உழக்களிப்பூந்துணர்ச்சினையபுத்திரதீபமுறையுமாளரிவருகவே *
உபயசரணம்பரவும்டியருக்கிருவினையொழிக்குமழைமுகில்வருகவே. (௯)

வேறு.

தளவுகாட்டும்வெண்முறுவறவழுந்துவர்வாயசோதைபச்சைத் *
தழைக்கூரையினின்முடைப்பகுவாய்த்தடவுத்தாழிநெட்டுறியின் *
அளவுகாட்டநிமிர்ந்துவெண்ணெயருந்துமளவிலவளதுகண் *
டடிக்குந்தாம்புக்கஞ்சியழுதனாயிலார்க்குமணிபொத்தித் *
துளவுகாட்டுந்திருமேனிதுவளத்திருத்தாண்முன்செல்லத் *
துணைக்கட்கமலம்பின்கிடப்பத்துண்ணென்றோடுஞ்சிறுவாவுன் *
களவுகாட்டேமெம்மிரண்டுகண்ணுங்களிக்கவருகவே *
கருணைசுரந்துமடைதிறந்தகண்ணாவருகவருகவே. (௰)

வேறு.

கோட்டிற்பகுத்தமதிவைத்தனையகுறுநுதற்கோற்றொடியசோதைவாழைக் *
குறங்கிற்குடங்கையினெடுத்தணைத்துச்சிறியகொடிபட்டநுண்ணுங்குல் *
வாட்டிப்பணைத்தமுதுசூற்கொண்டுவெச்சென்றவனமுலைக்கண்டிறந்து *
வழியுமின்பான்முதற்றனையூற்றிவெண்சங்குவார்த்துவாயிதழதக்கி *
ஊட்டித்தலைப்புறஞ்சங்குமும்முறைசுற்றியொருமுறைநிலங்கவிழ்த்தி *
உடலங்குலுக்கிப்பசும்பொடிதிமிர்ந்துதிலாயூடெற்றுதண்டுளிநனீர் *
ஆட்டிப்பொலன்றொட்டின்மீதுவைத்தாட்டவளராயர்குலமுதல்வருகவே *
அருள்பெருகியலையெறியுமரவிந்தவிலாசனன்னழகன்மாதவன்வருகவே (௰௧)

வாரானைப்பருவமுற்றும். ஆ திருவிருத்தம் - அ௪.

ஏழாவது.

அம்புலிப்பருவம்.

விடங்கலுமிழெயிற்றராவாலிலைப்பள்ளியுள்விழித்துணைமுகிழ்த்தடங்கா *
வெளிமூடுவெள்ளத்துமலர்மண்டபத்தயனும்வேதமுங்கடவுணதியும் *

கடங்கலுழ்புழைக்கரக்களிறெட்டுமெட்டுக்களிற்றுப்பெரும்பாகரும்
காளகூடக்களத்திறைவர்பதினொருவருங்கதிரவர்கள்பன்னிருவரும்
மடங்கலும்வெண்டிரையும்வெண்டிரைவளாகமும்வானுமெறிவளியுமனலும்
மன்னுயிர்ப்பன்மையும்வகுத்தளித்துப்பின்னர்மாய்க்கும்மயக்கவிளையாட்
டடங்கலுமொழிந்தின்கண்விளையாடல்கருதினானம்புலியாடவாவே
ஆரணந்தொழுகின்றகாரணன்னிவனுடன்னம்புலியாடவாவே. (௧)

பொங்குவாலுளையேழுபரிமாத்தொடக்குபொற்றேருகைத்திருளொதுங்கப்
பொழிகதிர்த்தபனமண்டலமூடறுத்துநீபோதுதற்குண்மயங்கில்
+ வெங்கண்மால்கூரலைகருங்கடற்குண்டுநீர்விரிதிரையிலங்கைமூதூர்
விட்டுப்பெருங்கிளைக்குழுவொடும்பொருசேனைவெள்ளத்தினொடுநிறைந்த
திங்கணாண்மாலைவெண்குடையவுணன்வானமீச்செல்லவத்தபனனுகம்
திறந்தெழும்பெருநடவையூடிழிந்தின்றுநீசேணொடுவிசும்புகைவிட்
டங்கண்மாநிலமுந்திபூத்தவன்றன்னுடன்னம்புலியாடவாவே
ஆரணந்தொழுகின்றகாரணன்னிவனுடன்னம்புலியாடவாவே. (௨)

மூளைக்குங்கலாநிலாவமுதநிறைமண்டலம்முழுகுதரமறைகிடக்கும்
முடக்கும்பகட்டுடனிமிர்ந்துவெம்புகையராமுள்ளெயிறுநட்டமூத்தித்
தொளைக்கும்பெரும்பாழிவாய்கக்குநஞ்சினித்துண்டப்படைக்கொடிப்புட்
டேவியஞ்சேவற்கிரிந்துபோமயிர்பொறித்துள்ளுமான்பிள்ளைமற்றோர்
வளைக்குங்கருங்கார்முகங்கண்டெழத்தாவும்வல்லிருட்பொசிவானின்வாய்
வட்டவாழிப்படைவெயிற்படவொதுங்குமேழ்மலனுக்குமத்துழக்கும்
அளைக்குந்திருப்பவளமங்காக்குமாலுடன்னம்புலியாடவாவே
ஆரணந்தொழுகின்றகாரணன்னிவனுடன்னம்புலியாடவாவே. (௩)

வளிநான்றமணிமுறத்தழைசெவிச்சிறுகவுளில்வண்டோடிரண்டுபாடும்
மழைபாய்கடாக்கரிக்கண்கொடுத்தும்பச்சைமரகதத்துச்சிபூத்த
ஒளிநான்றநற்படிவமல்யப்பெருந்துவசனுட்களிப்புறவளித்தும்
ஒருஞான்றுபேரடிசில்வாய்மடுப்புச்செம்பொனுடைநெகிழ்த்தும்மலைத்தேன்
துளிநான்றவாலவாய்வேப்பிணர்த்தென்னர்மூன்றொடைநறுங்குழல்விரித்தும்
தொல்லைநாள்செய்தவையினரியதன்றேயிருடோய்ந்தநின்மறுவொழித்தல்
அளிநான்றபூந்துழாய்மணிமார்பனிவனுடன்னம்புலியாடவாவே
ஆரணந்தொழுகின்றகாரணன்னிவனுடன்னம்புலியாடவாவே. (௪)

கறைபட்டமுக்கவைச்சூலவேலெறிபடைக்கடவுள்சடிலத்திருந்து
கண்டத்திலூற்றெழுவிடத்தாலுணங்கியுங்கங்கைப்பெருக்கெடுத்துத்
துறைபட்டவெண்டலைத்திரையினடுவுடலந்துளங்கியுந்நுதல்கிழித்துத்
தூற்றுங்கடுந்தழற்சூடுண்டும்வளைபிறைத்தொளையெயிற்றரவுகண்டும்
குறைபட்டவட்டவுடனிறையாதிருந்துக்கொதிக்கும்வெதுப்புமாறக்
கொய்துழாய்ச்சோலைநிழல்குடிபுக்குவாழலாங்கோதிலாவேதநான்கும்
அறைபட்டதாட்கமலமலையலங்காரனுடனம்புலியாடவாவே
ஆரணந்தொழுகின்றகாரணன்னிவனுடன்னம்புலியாடவாவே. (௫)

கோளுந்திரைப்புணரியுதரத்திலுடன்வந்தகொத்தளிப்பத்திலக்கம் *
குடைந்தாடுபொற்றருக்கிளைகிளர்படப்பைசெங்கொள்ளைவெயில்புடைததும்பக்
காலுங்கதிர்க்கடவுண்மணிவண்டல்படுகலவைகமழுமணிமார்பிலாரம் *
கள்ளுடைத்தொழுகங்கமடல்விண்டலைந்துளவுகடிமலர்த்தாமம்மேவலும் *
சேலுங்கெடுத்தவிழிமலர்மண்டபந்தருந்திருமாதுதேவிவெள்ளைத் *
தெண்ணிலாவுமிழ்கின்றநீயுமிவன்மைத்துனன்சினைவராலுகளவெகினம் *
ஆலும்புனற்சிலம்பாற்றலங்காரனுடனம்புலீயாடவாவே *
ஆரணந்தொழுகின்றகாரணன்னிவனுடன்னம்புலீயாடவாவே. (௬)

உடைதிரைக்கடன்முளைத்துலகுவலம்வருமொற்றையுருள்பெருந்திகிரியிரவி *
உடனுறையினென்றவளவொளிமாழ்குமிளநறவமுமிழமடல்விண்டதுளபத் *
தொடைகமழ்திருப்புயத்தாயிரந்தேரிரவிசொரிகதிர்க்குப்பைகக்கித் *
தூற்றுஞ்சுடர்ப்பாழியாழியெதிர்யான்வரத்துணியுமாறெங்ஙனென்னில் *
புடையுமிழுமாயிரம்மணிவெண்ணிலாக்கற்றைபொங்குவெண்கதிருடுக்கும் *
புரிமுகக்கடவுட்டனிச்சங்கமுண்டுநீபோதுதற்கஞ்சறகுவர் *
அடையவிரியச்சங்கம்வாய்வைத்தவாயனுடனம்புலீயாடவாவே *
ஆரணந்தொழுகின்றகாரணன்னிவனுடன்னம்புலீயாடவாவே. (௭)

மாலைவாய்நறவுபாய்கொந்தளச்சதிரிளமடந்தையர்முகத்தையொத்து *
மலைதல்கொண்டிடபகிரியருகுவரிலீயெட்டிவளரிருளென்றழித்தும் *
சூலைவாய்வளைகதறுநூபுரநதிப்புகிற்றுவளுநுரையென்றுடைத்தும் *
சூழல்வாய்வரிவிளையவெள்ளையம்புயமென்றுசூழ்ந்துகொய்துங்கிளிக்குப் *
பாலைவாய்விடவெள்ளிவெண்கிண்ணமென்றுகைப்பற்றியுங்கதிர்த்தும்பப் *
பார்க்கின்றபேராடியென்றெடுத்தும்பகைவிளைப்பரொன்றஞ்சறுஞ்சா *
ஆலைவாயொழுகுபாகாறுபாய்மலையனுடனம்புலீயாடவாவே *
ஆரணந்தொழுகின்றகாரணன்னிவனுடன்னம்புலீயாடவாவே. (௮)

காயுங்கடுங்கதிர்விரித்தொற்றையாழியங்கடவுளலைதலைபிளந்து *
கனைகடற்பெருவயிறுதித்தெழக்கனியவிளைகனியென்றுபுகவிழுங்கப் *
பாயுங்கவிக்குலத்தொண்டர்நாயகனைநின்பால்வரவிடுப்பனன்றேற் *
பாழிவாயங்காந்துகவ்வியிருகவுளுட்படுத்துக்குதட்டவாலம் *
தோயும்பிறைப்பற்சுருட்டுடற்பாயல்வெஞ்சூட்டராவினைவிடுப்பன் *
துளபத்துணர்க்கண்ணியெந்தைகீழ்நின்றுநாற்சுருதிதொழுதாள்செவப்ப *
ஆயுந்தமிழ்ச்சங்கமீதிருந்தானுடன்னம்புலீயாடவாவே *
ஆரணந்தொழுகின்றகாரணன்னிவனுடன்னம்புலீயாடவாவே. (௯)

துள்ளக்குறுந்திவலைவெள்ளிவெண்டிரையாடுதொடுகடற்றலைதுயின்றும் *
தொளைக்குங்கழைக்குழலெடுத்திசையெழுப்பியுந்தொல்லைமாஞாலமேழும் *
கொள்ளப்பரந்தமறைமழலைவாய்நான்முகக்குழவியைப்பெற்றெடுத்தும் *
கொடியாடிலங்கையிற்பேயாடவிற்கடைகுழைத்தும்பாந்துபூக்கும் *

வெள்ளத்தடங்கமலம்யானருகுவரின்முருகுவிரிமுகங்குவியுமென்று *
வெருவரலிவன்கரியகடவுண்மேகத்துடலம்விளைகமலவனமனஞ்சூழ் *
அள்ளற்பெரும்பள்ளம்வந்ததன்றிவனுடன்னம்புலீயாடவாவே *
ஆரணந்தொழுகின்றகாரணன்னிவனுடன்னம்புலீயாடவாவே. (௰)

விரியுங்கதிர்க்கற்றையமுதூறநீவந்தவேலைப்பெரும்பள்ளநீர் *
வெஞ்சிலைகுழைத்திவன்கணைதொடவறண்டதுவிழைந்துநீயரசுநாளும் *
புரியும்பகட்டுவெளியிவன்மலர்த்தாமரைப்பொற்றாளெடுத்துநீட்டப் *
பொலனுடல்பிளந்ததடவிரவியொடுநீயரும்புகலென்னவடையும்வெற்பு *
சொரியும்புயற்றலைதடுக்கைக்கிவனன்கற்றொடவடிபறிந்ததிவனைத் *
தொண்டையங்குதலைவாய்மதலையென்றெண்ணலஞ்சூற்கமுகுவெண்பாளைவாய் *
அரியும்பசுந்தேனரும்புமலைவாணனுடனம்புலீயாடவாவே *
ஆரணந்தொழுகின்றகாரணன்னிவனுடன்னம்புலீயாடவாவே. (௰௧)

அம்புலிப்பருவம்முற்றும். ஆகதிருவிருத்தம். ௬௬

எட்டாவது.

சிற்றிற்பருவம்.

ஈட்டிற்பொறிச்செஞ்சுரும்பறுகால் - எறியநறைபாய்செழுங்கமலத் *
திறைவன்முதலாமிமையவர்கள் - இறைஞ்சுமௌலியேந்துதலை *
ஓட்டிற்பொறித்துவலனுழி - ஒருங்கவடிமைகொண்டதுபோல் *
உனதுமலர்த்தாளுட்கிடக்கும் - ஒற்றைக்கடவுட்சங்குவண்டல் *
வீட்டிற்பொறித்தின்றெங்களையும் - விழைந்தாட்கொள்ளநடந்ததிரு *
விளையாட்டுனக்குநன்றலைபாய் - வேலையுதித்ததிருவின்முலைக் *
கோட்டிற்பொறித்தசுவடெழுதோட் - கொண்டல்சிற்றில்சிதையேலே *
கொண்டலுறங்குஞ்சோலைமலைக் - கோமான்சிற்றில்சிதையேலே. (௧)

கொழித்துக்கிரணஞ்சொரிகழற்காற் - கோகனகத்திலுறைகங்கை *
குதித்துத்திரைநீர்ப்பெருக்கெடுத்துக் - கோட்டும்வண்டற்பாவையினை *
அழித்துச்சமைத்தமலர்க்கறியை - அரித்துத்தூதைக்கலத்துமணல் *
அடுஞ்சோறெடுத்துமணிப்பற்றும் - ஆடுங்கழங்குமம்மனையும் *
சுழித்துப்பசும்பொற்குழமகவைச் - சுழியிற்படுத்துச்சிற்றடியேம் *
துயரமுறவேநடுவுடலம் - சுருட்டுங்கடுவுட்பாம்பணையின் *
விழித்துத்துயிலுமுகின்முன்றின் - மிதித்துச்சிற்றில்சிதையேலே *
விதுரன்மனைக்குமிதிலைக்கும் - விருந்தன்சிற்றில்சிதையேலே. (௨)

வாழியெடுத்துநிற்பரவும் - மறைநான்கரற்றுநான்குமுகன் *
வடிவமெடுத்துப்படைத்துநிறை - மதியங்கொழிக்குநிலாவென்னப் *
பூழியெடுத்ததிருமேனிப் - புலவுக்கவைவேன்மழுப்படைக்கைப் *
புனிதனுருக்கொண்டழித்துவலம் - புரியுமுகச்சங்குடன்வட்ட *

ஆழியெடுத்தவுருவெடுத்தால் - அளித்துப்பயிலுந்திருவிளையாட் *
டன்றியழித்தவியல்பன்றே - அணைக்குங்குடுமித்தலைத்துயில்காண் *
கோழியெழுப்புஞ்சோலைமலைக் - கோமான்சிற்றில்சிதையேலே *
கொண்டலுறங்குஞ்சோலைமலைக் - கோமான்சிற்றில்சிதையேலே. (௩)

இளைத்துத்தவளுமிடைமடவார் - எண்ணில்பதினாறாயிரவர் *
இழைக்குங்குமத்தோடமைநெருக்கி - இலவத்துவர்வாயமுதருந்தித் *
திளைத்துக்குஞ்சிப்பெரும்புலவி - திருத்தித்தேய்ந்தும்மகளிர்முலை *
தீண்டியறியேனென்றுபொய்யே - தேவர்தெளியமுன்னையுயிர் *
முளைத்துத்தழைப்பக்கரிக்கட்டை - முதுகுமிதித்தாய்சிற்றடியேம் *
முன்றிற்புறத்திலெதுதெளிய - முளரித்தாளான்மிதிப்பதுதேன் *
வளைத்துச்சுழிக்குந்துழாய்ப்புயல்யாம் - வகுக்குஞ்சிற்றில்சிதையேலே *
வானம்பிளக்குஞ்சோலைமலை - மன்னன்சிற்றில்சிதையேலே. (௪)

அலம்பாய்விளைநெற்பழனத்தில் - அள்ளன்மடுவிற்றுள்ளுகயல் *
ஆடுந்தரங்கக்கருங்கழியில் - அறையுஞ்சிறகர்ப்பேட்டெகினக் *
குலம்பாய்குவளைக்கோட்டகத்திற் - குண்டுசுனையிற்றொட்டநெடுங் *
குளத்திற்குறுந்தாட்கருமேதிக் - குழியிலுனதுபேர்யாணர்ச் *
சிலம்பாற்றயலிலாயிரநீர்த் - தெய்வத்தடத்தினன்றிமுன்றிற் *
றெள்ளிப்பரப்புமணற்குவையிற் - செக்கர்க்கமலமலராது *
வலம்பாய்திகிரிமுகின்மிதித்து - வளைக்குஞ்சிற்றில்சிதையேலே *
வாரிமகட்குநிலமகட்கும் - மன்னன்சிற்றில்சிதையேலே. (௫)

கோவைமணிப்பந்தெறிந்தாடும் - கொடிபொற்கழங்குபுனல்வாவி *
கொட்குங்கிரணச்செய்குன்று - கொய்பூந்தளவப்பந்தல்வண்டற் *
பாவையுகைக்கும்பொன்னூசல் - பராரைக்குரவந்தேன்கொழிக்கும் *
படப்பைகுதிக்குமான்கன்று - பசும்பொற்கிள்ளைப்பிள்ளையிரம் *
பூவையிவையுன்பதத்தூளி - பொதியப்பெருவீடுறிலடியேம் *
பொய்தலொழியுமலர்வனசப் - பொகுட்டிலிருக்குநான்குமுகத் *
தேவைத்திருவுந்தியிலளித்த - சிறுவன்சிற்றில்சிதையேலே *
தெள்ளுந்தரங்கப்பாலாழிச் - சேர்ப்பன்சிற்றில்சிதையேலே. (௬)

வேறு.

கொள்ளைநீர்க்குவளைக்கோட்டகமறந்தும் - குழந்தைவெண்மதிக்கோட்டுக் *
குன்றொடுங்குயில்போற்கூவுதன்மறந்தும் - கூருகிரிளங்கிள்ளைப் *
பிள்ளையைமறந்தும்மயினடமறந்தும் - பேட்டிளம்புறவோடும் *
பிணையினைமறந்துமூசலைமறந்தும் - பிள்ளைவண்டிதழுந்தக் *
கள்ளவாயொழுக்கும்வெள்ளிவெண்ணிலவு - காற்றிளமுகைமுல்லைக் *
கன்றினைமறந்துமிழைத்தயாம்வருந்தக் - கன்னியர்மனைவாயின் *
வள்ளையாலங்கண்டுயின்மலைக்கிறைவன் - மணற்சிற்றில்சிதையேலே *
வண்டமர்துளவன்மாலலங்காரன் - மணற்சிற்றில்சிதையேலே. (௭)

சுழித்தெறிதரங்கத்திருச்சிலம்பாற்றுத் - தூற்றியதிரையிட்டும் *
சொரிநிலாக்கிளைக்கும்வெண்மணற்குப்பைச் - சுடர்பொலன்முறத்திட்டுக் *
கொழித்துவெண்டுகிலிற்றலைமடிக்கொட்டிக் - குவித்ததோழியரோடும் *
குருமணிமுன்றிற்பரப்பிமெய்துவளக் - கோல்வளைக்குரலேங்கக் *
கழித்தடங்கமலத்துணைக்கரஞ்சேப்பக் - கலைமதிமுகம்வேர்ப்பக் *
கண்ணிமைப்புறுமலிழைத்தயாம்வருந்தக் - கடைவளையலம்பாயும் *
வழித்தலைமலர்த்தேன்சொரிமலைக்கிறைவன் - மணற்சிற்றில்சிதையேலே *
மாலிருஞ்சோலைமலையலங்காரன் - மணற்சிற்றில்சிதையேலே. (௮)

வேறு.

உரியுங்கடுங்கார்முகங்கண்டு - வளர்க்கும்பிணைக்கன்றகலுமது *
மடற்பூந்துளபத்திருமேனி - மழைக்கார்காட்டக்குயிற்பிள்ளை *
இரியும்வள்வாய்நெடுந்திகிரி - எறிக்கும்வெயிலைமுதுவேனில் *
என்றுகலாவமுள்ளொடுக்கி - இளையமயிற்பேடெம்மைவிட்டுப் *
பிரியுந்தவளத்தரளமணி - பிறழுநிலவுப்பெருவெள்ளம் *
பெருகுமுன்றிற்றலைவந்து - பெய்யும்பசும்பொன்னொளிபரந்து *
சொரியுங்கழற்காற்றுணைக்கமலம் - துவளச்சிற்றில்சிதையேலே *
சோலைமலைக்குநான்மறைக்கும் - தோன்றல்சிற்றில்சிதையேலே. (௯)

ஒடுங்கவுழிவிடப்பாந்தள் - உடலங்கிழியத்தூண்டுசக *
டுச்சிமிதிப்பப்பேரரக்கன் - உருவமெடுத்தெழுந்துபுகை *
ஆடுந்தழன்மெய்க்கரிக்கட்டை - அகலமிதிப்பக்குருகுலத்தில் *
அரசரிளங்கோவானததர் - அருங்கான்படர்கற்றலைமிதிப்பத் *
தோடுஞ்சுரும்புந்ததும்புகுழற் - றோகையுருவமெடுத்தொளி *
சொரியுந்தரளத்திருமுன்றிற் - றுவைக்கின்முன்னைவடிவிழக்கும் *
பாடுமறைநான்குடுத்தபதம் - பதித்துச்சிற்றில்சிதையேலே. *
பார்த்தன்றேர்க்கும்புள்ளிற்கும் - பாகன்சிற்றில்சிதையேலே. (௰)

முடங்காப்புரண்டுதிமிருரகன் - முடியிற்கிடக்கும்புவியேழும் *
முந்நீரேழும்வரையேழும் - முழங்குமருவிப்பெருக்கெடுப்பக் *
கடங்காற்றியமாதிரமெட்டும் - கனகக்குடுமிப்பொலன்வரையும் *
ககனமேழுமுட்கிடப்பக் - கமலத்திருத்தாள்பொத்தியநாள் *
அடங்காப்புவியோகுற்றேவல் - அடியேமாரையயர்முன்றில் *
அளக்கவிற்றைக்கடிவைப்ப - தலைநீருடலந்தழல்பரப்பத் *
தடங்கார்சிலையிற்பகழிதொடும் - தலைவன்சிற்றில்சிதையேலே *
சங்கத்தழகனிட்டபகிரித் - தலைவன்சிற்றில்சிதையேல். (௰௧)

சிற்றிற்பருவமுற்றும். ஆக திருவிருத்தம்- ௭௭

சிறுபறைப்பருவம்.

மறுதலையரக்கருயிரயில்குடிப்பவமரரையளித்தநெடுவேள் *
மதனழியவெற்றுசிறுவயிறலைத்துமயில்வரைபறப்பவனல்போய் *
மறிதிரைவயிற்றின்மூழ்கிமுதுவெப்பமுமிழுடல்குளிர்ப்பவரிதா *
வட்டிசைபுரக்குமகள்புறமளிப்பமழைதுளிமறுத்தவனமீ *
தெறுழ்வலியிருப்புநெடுநதிமருப்புமுதுகலைதெறிப்பவடல்வாய் *
எறிபடைபிடித்தகரம்விடவுடுத்தபுலியதணிலத்துவிழவான் *
இடிபடவரற்றுதமருகம்வெடித்தகுரலவியநெட்டையரவூர் *
எரிவிழுதுவிட்டசடைபிணிநெகிழ்ப்பமரகதம்விரித்தவிலைசூழ் *
அறுகிதழிகொக்கினிறகுதிரவட்டமதியின்வகிர்பட்டநுதன்மீ *
தலையும்வெயர்நெற்றிவிழியழலவிப்பவமரநதியெற்றிவிழுநீர் *
அறைதிரைகொழிப்பவுடல்பொதிவெளுத்தபொடிகழுவவொற்றைரதமூர் *
அருணவெயில்கக்குபழையவொளிகொட்பவரன்முதுகளிப்புமுதனுள் *
தெறுமுனைமுகத்திலவுணனெழுவொத்ததிரள்புயமறுத்தகறைநீர் *
சிகரவரைவிட்டவருவியைநிகர்ப்பவெறிதிகிரிவிட்டமதிதோய் *
திருமலைபுரக்குமழகுணிலெற்றுசிறுபறைமுழக்கியருளே *
திருவரைவணக்கியழகுணிலெற்றுசிறுபறைமுழக்கியருளே. (க)

வேறு.

ஒளிபெருகித்துளும்புபரமபதத்திறைவா *
உகளமுதைச்சுரந்தவெளியகடற்றுறைவா *
அளியுழுபற்பவுந்தியெழுதரணிப்புரவா *
அயனுமைவைத்தபங்கன்விபுதகுலக்குரவா *
விளைநகையுட்டதும்புதிகிரிசெலுத்துமழவா *
விழுநறைகக்குபொங்கரிடபமலைக்கிழவா *
குளிரமலர்க்கைகொண்டுசிறுபறைகொட்டுகவே *
குணிறலையெற்றிநின்றுசிறுபறைகொட்டுகவே. (உ)

வேறு.

செக்கரிலொளிகெழுதுப்பினையெறிகடல்செற்றியதழலெனவே *
திக்குளசுறவகைநெற்குலைசடைபடுசெய்த்தலைவிழவருசேல் *
முக்கியகுருகெழவுட்பொதிசினைசிறைமுத்திடவளைதவழா *
முக்கெறிகுரல்தனைவிட்டுயிர்நிகர்பெடைமுற்புயில்வெளியென்வால் *
எக்கரினிலவியவுச்சியிலிளமலரிற்புறமளவிருகால் *
எட்டடியிடவிழைபெட்டையினெடுதிரையெற்றியமுதுபுனல்வாழ் *
குக்குடமலமருவெற்புறைமழைமுகில்கொட்டுகசிறுபறையே *
கொத்தளிதிரையுழுமைத்துளவணிமுகில்கொட்டுகசிறுபறையே. (ங)

வேறு.

வெண்டிரைப்பாற்கடல்விடப்பாம்புடற்றும்புவெற்புமத்தெறிமுழக்கும் *
விண்கிழிக்குங்குடுமிநொச்சிசூழ்மதிலைவாய்வின்முடக்கியமுழக்கும் *
புண்டிரைக்குருதிநீராறுபடவாடகன்பொன்மார்பிலுகிரழுத்தப் *
புடைக்கும்பெருந்தூண்பிளந்தெழுமுழக்கமும்பொங்கர்மதுவாய்மடுத்து
வண்டிரைத்திதழ்க்குதட்டுந்துணர்த்தருவூழ்த்தமலர்கொணர்ந்தமரரிரிய *
வாய்வைத்தவெள்வளைமுழக்கமுங்கேட்டுளம்வாழ்ந்தயாமின்றுமகிழத் *
தெண்டிரைப்பரிபுரநதித்தலைவகுணிலெற்றுசிறுபறைமுழக்கியருளே *
செகமலையுமெனவுதரமணைகயிறுவரியுமுகில்சிறுபறைமுழக்கியருளே: (௪)

வேறு.

புள்ளூந்திரையும்பொருபுனல்குடையும்பூந்தொடிமங்கையர்தேம் *
பொதிவண்டலையுங்குமுதத்திளநகைபொங்கொளிசொரிநிலவும் *
கள்ளூண்சிறைவண்டினமும்பரவுங்கற்றைக்குழல்செருகும் *
கடிகமழ்பித்திகைவிடுமலர்தூற்றுங்கலைநிலவும்மிடையைத் *
தள்ளுங்கொங்கைத்தரளக்குவைசொரிதண்ணிலவும்பருகிச் *
சற்றும்படுபசிதணியாதிளையசகோரக்குலமுலவும் *
தெள்ளூம்புன்னாபுரநதியிறைவன்சிறுபறைகொட்டுகவே *
செம்பொற்சாரற்குலமலையிறைவன்சிறுபறைகொட்டுகவே. (௫)

வேறு.

கரைகடந்திரைக்குநீத்தநீர்க்குழியிற்கால்விழமருப்பேற்றும் *
கழித்தலைக்குமுதவாயிதழ்மடுத்துங்கட்செவிகிடவாமல் *
விரைகமழ்துளவப்பொதும்பரினீழல்வெப்பறப்புயம்வைத்தும் *
விடுமடற்கமலவுந்தியிற்பூத்தும்விண்ணுடறொடுமெட்டு *
வரையராவிருத்துநூற்றுவர்கூற்றின்வாய்புகச்சுவைதீர்த்தும் *
மலர்ப்பதந்தாவியளந்துகைக்கொண்டுமற்றொருபோதுநீங்கக் *
குரைகடல்வளாகமெமதெனக்குரிசில்கொட்டுகசிறுபறையே *
குலமலைவாணன்மாலலங்காரன்கொட்டுகசிறுபறையே. (௬)

தொடுத்தபூந்துளவத்தொல்டபுடையலம்புந்தோட்டலைவார்தூக்கிச் *
சூற்புனல்சுரக்குமுகிலுடரூழ்த்துச்சொரிவெயிற்பொலந்தானை *
உடுத்தவிர்பசியதிருவரைவணக்கியொழுகிளநிலாச்சங்கம் *
ஒல்லிடவொருகையதட்புறந்தடவவொருகையிற்குணில்வாங்கி *
எடுத்தசீர்ப்பாணிதூக்குடனிகழவெழுங்குரலடியேங்கள் *
இருசெவியுறைப்பவரக்கர்தம்முயிரையிருஞ்சினக்கூற்றிற்குக் *
கொடுத்துடனிமிருங்கடுஞ்சிலைக்கொண்டல்கொட்டுகசிறுபறையே *
குலமலைவாணன்மாலலங்காரன்கொட்டுகசிறுபறையே. (௭)

ஆட்டியுந்தலைநீர்குழம்பவெற்புழலவலைத்தகைகுணிருக்க *
ஆர்க்கும்வெங்குரலையெவரிவண்முழங்குமவ்வொனச்சிறுவர்க்குக் *
காட்டியுமுடலந்துண்ணெனப்புரிந்துகண்களைத்திசைவைத்தும் *
கரத்தினுன்மீளப்புடைத்தெழுங்குரற்குக்காந்தளஞ்செவிதாழ்த்தும்

சிறுபறைப்பருவம்.

+ நீட்டியுந்திரைத்துமெதுவெனநகைத்துநெஞ்சயர்ந்தலமந்தும் *
நின்றுலாங்குரிசில்புறவினிற்பரப்பிநிரையினைக்கழையூதிக் *
கூட்டியும்யமுனைக்கரைவருங்களிறுகொட்டுகசிறுபறையே *
குலமலைவாணன்மாலலங்காரன்கொட்டுகசிறுபறையே. (௮)

வேறு.

விழித்தலைவடித்தநெட்டுசிநட்டுங்குப்பைவெந்தீப்பிழம்பிலிட்டும் *
வெண்ணிணத்தீந்தடியரிந்துசெம்புண்ணின்வாய்வெள்ளுப்புநீரிறைத்தும் *
சுழித்தலைபரந்தாடுமுதிரநீத்தத்தினிற்றுயருழப்பத்தள்ளியும் *
சுடர்வாணிலைக்கள்ளிமீதெறிந்துந்நாசிதுண்டுமூச்சுள்ளடங்கக் *
குழித்தலைதலைக்கீழுறப்புதைத்தும்புலாற்குருதியுடல்போட்டுநாயின் *
கோள்வாய்ப்புகுத்துமாதண்டமயர்மறலிபதிகுறுகாமலடியருக்காத் *
தெழித்தலையருவருவிமலைவந்துநின்றமுகில்சிறுபறைமுழக்கியருளே *
செகமலையுமெனவுதரமணைகயிறுவரியுமுகில்சிறுபறைமுழக்கியருளே. (௯)

பாந்தளிற்பஃறலைச்செம்மணிக்குப்பையிற்படர்வெயிற்குடல்வெதும்பிப் *
பாண்சுரும்பறுகால்கிளைக்கும்பசுந்துழாய்ப்பள்ளியந்தாமநீழற் *
சாந்தளறெடுத்துக்கொழிக்கும்பணைப்புயத்தவிசுநடுவிற்றிருக்கும் *
தரைமகள்விரும்பியெக்காலமுந்நிலவெழுந்தவளவொண்சங்குடுக்கும் *
காந்தளங்கையேந்துபாவையிப்பறையொலிகறங்கமெலியசுணமல்லள் *
கனிவாயின்மொழிகற்றுவளர்கிளிப்பிள்ளைசூற்கருவிமுகில்கண்படுப்பத் *
தேந்தழைப்பாயலருணற்சோலைமலைவாணசிறுபறைமுழக்கியருளே *
செகமலையுமெனவுதரமணைகயிறுவரியுமுகில்சிறுபறைமுழக்கியருளே. (௰)

துளிகொண்டவெள்ளமிர்தமிடையருதொழுகிவிளைதுகிர்பழுத்தனையசெய்ய *
தூயவாயூறலுமுகத்தலைகுழற்றலைதுவற்றிவிழுபுழுகுநெய்யும் *
அளிகொண்டதண்டுழாய்ப்பள்ளித்திருத்தொங்கலகவிதழ்விரிந்தோடுதேன் *
அலையும்புனற்படத்தட்பமுற்றெழுகுரலவிந்ததென்றருகுபாயும் *
ஒளிகொண்டகடவுட்கௌத்துவச்செக்கர்மணியுச்சியிற்கற்றைவெயில்வாய் *
ஒலிபொங்கவென்றதள்வெதுப்புங்கருங்கொண்டலுடுபதிக்குழவிதவழும் *
தெளிகொண்டதலையருவிதுஞ்சுகுலமலைவாணசிறுபறைமுழக்கியருளே *
செகமலையுமெனவுதரமணைகயிறுவரியுமுகில்சிறுபறைமுழக்கியருளே. (௰௧)

சிறுபறைப்பருவம்முற்றும். ஆ திருவிருத்தம் - ௩௰௮.

பத்தாவது.

சிறுதேர்ப்பருவம்.

+ இருகரமுஞ்செவப்பவலனேடிழைத்துவிளைதேன் *
எழுதளவம்புதித்தகொடிவேரொதுக்கிமலரால் *
மருவெழுந்தரிட்டுவெயில்வான்மறைத்துமலிதூள் *
மடியமுகந்துகொட்டியிறைநீர்மழைக்கண்மடவார் *

திரையளகங்குலைப்பவிழுதாதொதுக்கியடியேம் *
நிலவியமுன்றில்வட்டநடுவேநிறுத்திமனைவாழ் *
திருவுறைபொங்கர்வெற்பசிறுதேருருட்டியருளே *
திகிரிபிணைந்தணைத்தசிறுதேருருட்டியருளே. (௧)

பொறையுடலம்பிளப்பவுழுசாறுவைத்தும்வருசேல் *
பொருகதவந்திறக்குமடைவாயடைத்துநுரைபாய் *
அறைபுனல்பொங்கியெற்றுதிரைகாலுடைத்தும்வயலூய்
அளறுபெருங்குருத்துமுளைநாறழித்துமணியால் *
மறையவரம்புமுற்றுமுதிரூஉகுத்தும்வளையோர் *
மளவருடன்பகைத்தபுன்றுடுடுத்தவளிசூழ் *
சிறையெறிபொங்கர்வெற்பசிறுதேருருட்டியருளே *
திருவளரும்புயத்தசிறுதேருருட்டியருளே. (௨)

வேறு.

புழுதியளைந்துதெருத்தலையின் - புறம்போயனையின்மணியசைத்தும் *
புனிற்றுவந்ததெனவுரைத்தும் - பொங்கலெனச்சேறடியிழுக்கும் *
தொழுவிலுரலைப்பிணிப்பொழித்தும் - துள்ளுங்குழக்கன்றெருத்தணைத்தும் *
தொடர்பாய்ந்தறுத்ததெனவுரைத்தும் - சொரியும்விழிநீர்மெய்போர்ப்ப *
அழுதுபொருமிநின்றுபொய்யே - அடித்தாரொன்றுமிலைமனையில் *
அசோதைபதறியோடிவர - அழைத்துநகைக்குமழலைமுகில் *
கொழுதுமளிதோய்சோலைமலைக் - கோமான்சிறுதேருருட்டுகவே *
குளிறுஞ்சிலம்பாறுடையமறைக் - கோமான்சிறுதேருருட்டுகவே. (௩)

மீன்கோட்டலைக்கும்பெருவாரி - வெள்ளத்தெழுந்தவெற்பும்வட *
வெற்புமழுந்தமுன்னாளில் - வெள்ளைவராகப்பெரும்போத்துக் *
கூன்கோட்டிரட்டைநுதிமடுத்துக் - குழியில்வீழ்நிலமகளைக் *
கொண்டுதிமிரநாற்புறமும் - கொழிக்குந்தரங்கப்புனல்போல *
வான்கோட்டிளையழரியமுது - வளைக்குமிரதநெடுஞ்சிகர *
மருங்குதொடுக்குமிருல்பிளக்க - வழியுங்கடவாரணங்குத்தித் *
தேன்கோட்டிழியவருஞ்சோலைச் - சிலம்பன்சிறுதேருருட்டுகவே *
தெள்ளுந்தரங்கப்பாலாழிச் - சேர்ப்பன்சிறுதேருருட்டுகவே. (௪)

அண்டருவலைக்குடிற்படல்வாய் - அனைத்துந்திறந்துதோற்றவுறி *
அலைந்துதோற்றவுரன்மிதித்த - அடியின்சுவடுதோற்றமுதிர் *
வண்டலளைபானிறைந்ததடா - வயிறுகுறைந்துதோற்றவிடை *
மகளிர்துவர்வாயலர்தோற்ற - வதனம்வெகுளிதோற்றவிளந் *
துண்டமதிவாணுதற்பவளத் - துவர்வாயசோதைகைமாறு *
தோற்றவுடனேயருடோற்றத் - துணைக்கண்மைநீர்தோற்றவளை *
உண்டகளவுதோற்றுமல் - உலகமேழுமுண்டதிரு *
உதரங்குழைய்வழுதமுகில் - ஓட்டுஞ்சிறுதேருருட்டுகவே. (௫)

வேறு.

களிக்கக்குலப்பொதுவரொண்ணிலாயிரவராங்கன்னியரிலொருவரைமலர்க் *
கண்ணருள்புரிந்துமலர்மணிமுடியிலொருவரிருகால்வைத்துமொருவர்முலைதோய்ர் *
குளித்துக்களிப்பக்கலந்துமலர்கற்பகக்கொடியொருவர்கொங்கைமுற்றக் *
கோட்டியுமுரக்களபவள்ளல்வாயொருவரிடுகுறியொருவர்காண்குருமல் *
ஒளித்துப்பெருந்துனியொழித்துமயலொருவருடனாடியும்பகலொன்றின்வாய் *
உ.வலையக்குடிலடங்கத்திரியுமிளையமுகிலொழுகுமொளிமணியரைத்துத் *
தெளித்துக்குழைத்தனையமழலைவாயழகனேசிறுதேருருட்டியருளே *
சிலைவிசயன்விடுபெருந்தேர்கடவுமழகனேசிறுதேருருட்டியருளே. (௬)

பூநறுவாறுபாய்சந்தனக்கொம்பர்ப்புறத்துங்கடற்பிறந்து *
பொன்பரப்புந்துணர்க்கற்பகக்கொம்பர்ப்புறத்தும்வடந்துவக்கி *
மீனறுவொழுகுமணிநூபுரநதிக்குவளைவிண்டபொற்றுதின்வெள்ளி *
வெண்டிரைக்கங்கையின்பொற்றுமரைத்தாதின்வேரியங்கால்கொழிப்பக் *
கானறுவண்டுமுரல்கொந்தளக்குறமடக்கன்னியரும்வானநாட்டுக் *
கன்னியருமிருமருங்காட்டிடச்சதிரிளங்கன்னியர்களுஞ்சலாடும் *
தேனறுவிளையிருறுலருமலைவாணசிறுதேருருட்டியருளே *
சிலைவிசயன்விடுபெருந்தேர்கடவுமழகனேசிறுதேருருட்டியருளே. (௭)

அலையெடுத்திருகரைநெரித்துச்சுருக்கதறவறைபுனல்வறண்டுநெட்டை *
ஆழியிற்கானலந்தேர்புகவிலங்கைக்குளாதவன்றேர்கடாவக் *
கொலையெடுக்கும்படையரக்கருடல்வெய்யபுட்குலமேறவுயிர்விமானக் *
கொடுஞ்சிப்பொலந்தேருகைப்பவானவமாதர்குங்குமச்சேதகத்து *
மலையெடுக்கும்புளகம்விளையவானெங்கணும்மாறுவிழாவெடுப்ப *
மாரவேடென்றலந்தேரூரமாதலிமணித்தேர்நடாத்திவெற்றிச் *
சிலையெடுக்குங்கொண்டல்பரிமாதொடக்குபொற்சிறுதேருருட்டியருளே *
சிலைவிசயன்விடுபெருந்தேர்கடவுமழகனேசிறுதேருருட்டியருளே. (௮)

குருமணிபொதிந்தபொலனூரமுஞ்சுரும்பேறுகொய்மலர்த்தாரலம்பும் *
குவடுபடுமிருபதுபணைத்தோளுமேமுடன்கூறுகொண்டுரிமையாளும் *
மருமலிமடற்கமலமங்கையும்மாவீரமங்கையுமகன்றுமகலா *
மண்மகளையகல்விக்கவேண்டுமெனவழிகொண்டுமாறுகொண்டெதிர்சிலைத்துப் *
பொருகளத்துயிர்மடியரக்கன்பொருப்புடற்பொதிபராகத்துவந்த *
பூவையர்கள்கண்மாரிபொழியவெங்கணைமாரிபொழியவெஞ்சிலையெடுத்துச் *
செருமலைந்தடல்வாகைபுனையலங்காரனேசிறுதேருருட்டியருளே *
சிலைவிசயன்விடுபெருந்தேர்கடவுமழகனேசிறுதேருருட்டியருளே. (௯)

அலம்புந்திரைக்குருதிவெள்ளமுந்தோன்மேயுமரில்படுநரம்புமென்பும் *
அளறுபடுநிணமுந்திரட்டுமுடலிட்டநாளறுதிவரினிலவுபுள்ளின் *
குலந்தின்னிலிழிவானகோதுபடுமெரியுங்கொடுந்தழற்கொள்ளைமிசையித் *
குப்பைவெண்பொடிபடும்பகுவாயருமலியுங்குறுநரியும்வாய்மடுத்தால் *

டிலம்படுத்தணைபருகின்மண்படும்பிறவியின்வழியைநற்றொண்டர்விட்டு *
வானவர்க்கெட்டாதவைகுந்தநாட்டையவாழ்விக்கும்வேதநான்கும் *
சிலம்புபுலம்புந்திருத்தாளலங்காரசிறுதேருருட்டியருளே *
சிலைவிசயன்விடுபெருந்தேர்கடவுமழகனேசிறுதேருருட்டியருளே. (௰)

பொங்காலைவெம்பாகடுங்கொழுந்தழலெழும்புகையுடற்றலைபுதைப்பப் *
புதுமணங்கமழவந்தனையென்றுபைம்பெடைபுலந்துபோய்ச்சிறைபுடைப்பத் *
தங்காதலம்பிள்ளைவெண்குருகுவாயிலாத்தாளிணைச்சென்றிறைஞ்சித் *
தாமரைப்பொற்பராகம்பொதியுமேனியைத்தைவந்துதாவல்கொழுதிக் *
கொங்காருநறுமலர்குயிற்றுமென்சேக்கையிற்குடிபுகுத்திக்கயத்திற் *
கோரமுங்கயலுமிரைகொத்தியலகோடலகுகோத்தணைத்துள்ளருத்திச் *
செங்கான்மடக்குருகுபுலவிதீர்த்துளமுருகுதிருமணம்புணருமருத *
சிலைவிசயன்விடுபெருந்தேர்கடவுமழகனேசிறுதேருருட்டியருளே. (௰௧)

ஆட்டுங்கொடுந்திரைபெருக்கெடுப்பச்சிதறியருகுவீழ்புனல்கொழிக்கும் *
அவிரொளித்தண்டரளமணிமாலையப்புறத்தண்டகோளகையுருவமேல் *
ஒட்டும்பசும்பொற்குவட்டுப்பராரைநெட்டொற்றைவடவெற்புவட்ட *
உச்சியிற்றைத்ததடமொட்டுநிரைகலைமதியினுடலொழுகுநிலவுகக்கிக் *
காட்டுந்தனிக்கோடுவெள்ளிவெண்காம்பிலகுகவிகையெனவிளையெடுக்கும் *
கடவுட்பகட்டேனமெயினர்புனமுழவகிற்காடெறியமழுமுகத்தைத் *
தீட்டுங்கதிர்ச்செக்கர்மணிவிளையுமலைவாணசிறுதேருருட்டியருளே *
சிலைவிசயன்விடுபெருந்தேர்கடவுமழகனேசிறுதேருருட்டியருளே. (௰௨)

சிறுதேர்ப்பருவம்முற்றும்.

திருமாலிருஞ்சோலைமலையழகர்பிள்ளைத்தமிழ்-

முற்றும்.

ஆதிகவி - ௧ - செய்யுட்காப்புக்கவி - ௧ - அவையடக்கக்கவி - ௨ - பழிச்சினர்ப்பரவற் கவி - ௰௫ - பருவம்பத்துக்குக்கவி - ௱௰௨. ஆககவிகள் - ௱௩௰௧.

ஆழ்வார் ஆசாரியர் திருவடிகளேசரணம்.